ஸ்ரீ கேசூடாமணி

இயற்றியது

குலசேகரர் முதலியார் உத்தரவேற்றுபிள்ளை

160
கதிரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160
TAR
T5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5415

...IVES

RA... SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R 21856

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOGIC.

# தர்க்கசூடாமணி.

இஃது

உருப்படி

[illegible]

[illegible]

பரிசோதிக்கப்பட்டு

[illegible]

JAFFNA

RIPLEY & STRONG, PRINTERS

1869.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நூன்முகம்.

இந்நூல் சமஸ்கிருதத்தில் சிவகேசவமிசிரன் இயற்றி யது. இது திராவிடத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக் கவுமின்று வாக்கியங்கள் மயங்கிச் சிக்கிக்கிடந்த மையால் இதனை எவர்க்கும் பயன்படுமாறாக்கும்பொரு ட்டு பரிஷ்கரித்துப்பதிப்பித்துத் தருகின்றோம். இந்நூலா சிரியர் கௌதமமதத்தை தழுவி நெறியே தமது நெறியாகக் கொண்டவராயினும் சமஸ்கிருதத்திலுள்ள நியாய நூ ல்களில் தர்க்கசங்கிரகத்தையே நமது ஆராய்ச்சியில் விசேட உப காரமாகக்கொண்டோம். தற்காலத்தில் ஏரோப் பியர் தர்க்கமே நியாய அங்கம் திரையாங்கமாகக் கூறி னாலும் பரதகண்டத்தார்க்கோ நியாய அங்கம் பஞ் சாங்கமாகக்கூறினாலும் இருதிறத்தோரும் மூன்றாயு ம் ஒத்தும் விரித்துரைத்தநியாய இலக்கணம் ஒன்றே யெனக்கொள்க.

பூலோகசிருட்டியனுள் மனுஷசிருட்டிக்கே புத்தி ச த்தி சிறப்பாமாதலின் தர்க்கலட்சணமறிந்து எவ்விஷயத் தினும் யுக்திசெய்து ஒருவரும் ஒழுக்கமே மனுஷர்க்கு உ ரியதொழுக்கமெனக்கொள்க.

செல்வனாமிட்டின் இதே தத்துவத்ததனில் பதிப்பி க்கும் விசேடங்களைச் ... பத்திச் சம்ஸ்கி ருதியின் சுருக்கமென்றெனக்கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்க்கண்டபத்திரம்.


| | பக்கம். |
|---|---|
| ௧. பிரமாணம். | ௬ |
| ௧. காட்சி. | ௰ |
| ௨. அநுமாநம். | ௰௫ |
| ௧. தற்பொருட்டநுமாநம். | ௰௮ |
| ௨. பிறன்பொருட்டநுமாநம். | ௰௮ |
| ௩. அந்நுவயவியதிரேகி. | ௰௯ |
| ௪. கேவலவியதிரேகி. | ௨௰ |
| ௫. கேவலாந்நுவயி. | ௨௧ |
| ௩. உபமாநம். | ௨௬ |
| ௪. உரை. | ௨௭ |
| ௨. பிரமேயம். | ௩௪ |
| ௧. ஆன்மா. | ௩௪ |
| ௨. உடம்பு. | ௩௬ |
| ௩. இந்திரியம். | ௩௬ |
| ௧. ஆக்கிராணம். | ௩௭ |
| ௨. இரசநம். | ௩௭ |
| ௩. சட்சு. | ௩௭ |
| ௪. துவக்கு. | ௩௭ |
| ௫. சுரோத்திரம். | ௩௭ |
| ௬. மநம். | ௩௭ |
| ௪. அருத்தம். | ௩௭ |
| ௧. திரவியம். | ௩௮ |
| ௧. பிரிதிவி. | ௩௮ |
| ௨. அப்பு. | ௩௯ |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம். |
|---|---|
| ௩. தேயு. | ௩௯ |
| ௪. வாயு. | ௪௰ |
| ௫. ஆகாயம். | ௪௩ |
| ௬. காலம். | ௪௫ |
| ௭. திக்கு. | ௪௫ |
| ௮. ஆன்மா. | ௪௬ |
| ௯. மநம். | ௪௬ |
| ௨. குணம். | ௪௭ |
| ௧. உருவம். | ௪௭ |
| ௨. இரசம். | ௪௮ |
| ௩. கந்தம். | ௪௮ |
| ௪. பரிசம். | ௪௮ |
| ௫. சங்கியை. | ௪௮ |
| ௬. பரிமாணம். | ௪௯ |
| ௭. வேறுதல். | ௫௰ |
| ௮. சையோகம். | ௫௰ |
| ௯. விபாகம். | ௫௰ |
| ௰. பரத்துவம். | ௫௧ |
| ௰௧. அபரத்துவம். | ௫௧ |
| ௰௨. குருத்துவம். | ௫௧ |
| ௰௩. திரவத்துவம். | ௫௨ |
| ௰௪. சிநேகம். | ௫௨ |
| ௰௫. சத்தம். | ௫௨ |
| ௰௬. புத்தி. | ௫௪ |
| ௰௭. சுகம். | ௫௪ |
| ௰௮. துக்கம் | ௫௪ |
| ௰௯. இராகம். | ௫௪ |
| ௨௰. துவேஷம். | ௫௫ |
| ௨௧. பிரயத்தினம். | ௫௫ |
| ௨௨. தருமம். | ௫௫ |
| ௨௩. அதருமம். | ௫௫ |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்.

௨௰. சம்ஸ்காரம். - - ௫௫
௧. வேகம். - - - ௫௫
௨. பாவனை. - - - ௫௫
௩. திதித்தாபகம். - - ௫௫
௪. கருமம். - - - ௫௬
௧. எழுதல். - - - ௫௬
௨. விழுதல். - - - ௫௬
௩. முடக்கல். - - ௫௬
௪. நீட்டல். - - - ௫௬
௫. நடத்தல். - - ௫௬
௬. சாமாநியம். - - - ௫௬
௧. பரம். - - - ௫௬
௨. அபரம். - - - ௫௬
௫. விசேடம். - - ௫௭
௬. சமவாயம். - - - ௫௭
௭. அபாவம். - - - ௫௮
௮. புத்தி. - - - ௫௮
௧. அநுபவம். - - ௫௯
௧. மெய்மை. - - - ௫௯
௨. பொய்மை. - - ௫௯
௨. நினைவு. - - - ௫௯
௧. மெய்மை. - - ௫௯
௨. பொய்மை. - - - ௫௯
௯. மநம். - - - ௬௰
௭. பிரவிருத்தி. - - - ௬௰
௧. தருமம். - - - ௬௰
௨. அதருமம். - - - ௬௰
௮. தோடம். - - - ௬௰
௧. காமம். - - - ௬௰
௨. வெகுளி. - - - ௬௰
௩. மயக்கம். - - - ௬௰

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | 
|---|---|
| | பக்கம். |
| ௯. பிரேத்தியபாவம். | ௬௰ |
| ௰. பலம். | ௬௰ |
| ௰௧. துக்கம். | ௬௰ |
| ௰௨. அபவர்க்கம். | ௬௧ |
| ௩. சமுசயம். | ௬௧ |
| ௪. பிரயோசனம். | ௬௨ |
| ௫. திட்டாந்தம். | ௬௨ |
| ௧. ஒத்ததருமிதிட்டாந்தம் | ௬௩ |
| ௨. வைதருமிதிட்டாந்தம். | ௬௩ |
| ௬. சித்தாந்தம். | ௬௩ |
| ௧. சர்வதந்திரம். | ௬௩ |
| ௨. பிரதிதந்திரம். | ௬௩ |
| ௩. அதிகரணம். | ௬௩ |
| ௪. உடம்பாடு. | ௬௩ |
| ௭. அவயவம். | ௬௩ |
| ௧. பிரதிஞ்ஞை. | ௬௩ |
| ௨. ஏது. | ௬௩ |
| ௩. உதாரணம். | ௬௩ |
| ௪. உபநயம். | ௬௩ |
| ௫ நிகமநம். | ௬௩ |
| ௮. தருக்கம். | ௬௪ |
| ௯. நிர்ணயம். | ௬௫ |
| ௰. வாதம். | ௬௫ |
| ௰௧. சற்பம். | ௬௫ |
| ௰௨. விதண்டை. | ௬௫ |
| ௰௩. எத்துவாபாசம். | ௬௫ |
| ௧. அசித்தம் | ௬௫ |
| ௧. ஆசிரயாசித்தம். | ௬௬ |
| ௨. சுருபாசித்தம். | ௬௬ |
| ௧. விசேடணாசித்தம். | ௬௭ |
| ௨. விசேடியாசித்தம். | ௬௭ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்.

௩. அசமர்த்தவிசேடணாசித்தம். ௯௮
௪. அசமர்த்தவிசேடியாசித்தம். ௯௮
௩. வியாப்பியத்துவாசித்தம். ௯௯
௪. சாத்தியத்துடனுடனிகழ்ச்சியில்லாதது. ௱
௨. சோபாதிகசம்பந்தி. ௱
௨. விருத்தம். ௱
௩. அநைகாந்திகம். ௱
௩. சாதாரணஅநைகாந்திகம். ௱
௪. அசாதாரணஅநைகாந்திகம். ௱
௪. பிரகரணசமம். ௱௧
௫. காலாத்தியாபதிட்டம். ௱௨
௰௪. சலம். ௱௩
௰௫. சாதி. ௱௩
௧. உற்கருஷம். ௱௪
௨. அபகருஷம். ௱௪
௰௬. நிக்கிரகத்தானம். ௱௫

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்க்கம்.

முதலாவது. பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசனம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிர்ணயம், வாதம், சற்பம், விதண்டை, எத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகத்தானங்களது தத்துவஞானத்தால் உயர் சிறப்படைப.*

* உயர்சிறப்படைதலென்பது வீடடைதல். பிரமாணாதிகளுடைய மெய்மை அறிவினால் மித்தியாஞானமாகிய பொய்மை அறிவகலும், அஃதகல, அதுகாரணமாகப் பிறக்கும் காமவெகுளிமயக்கங்களாகிய தோஷமகலும். அஃதகல அதன் காரியமாகப் பிறக்கும் புண்ணியபாவங்களாகிய பிரவிருத்தியகலும், அஃதகல, அதன் காரியமாகிய பிறப்பகலும், அஃதகலுங்கால், அதனொடு நிகழும் துக்கமகலும், அத் துக்கத்தினது ஒழிவே நிச்சிரேயசமென்றும் அபவர்க்கமென்றும் சொல்லப்படுகிற மோட்சம் என்றுங் கவுதமராதியர் கருத்தைச் சார்ந்தவராய் ஈதை தார்க்கிகர் பிரமாணாதி பதினாறு பொருளது உண்மையறிவால் வீடடைதலுண்டாமென்று கூறினரெனக் கொள்க. தர்க்கம் வல்லவரைக் கற்று, அதன் பிரமாணங்களைத் துணைக்கொள்வாரொருவன் ஆராயுங்கால், மெய்யிது பொய்யிதுவென்றறிவான்—கடவுள் அருளிய வேதம் யாது, மையர் இயற்றிய நூல் யாது என்றறிவான்—ஒன்றேனும் பொய்ம்மொழி பகருமாறில்லாதனது மற்றெப்பரிசிலும் சாமர்த்திய காரியமாயினும் தேவகாயோக்கியமுடையதன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தேசம்.—இலக்கணம்.—பரீட்சை.—எவ்வளவும் பிரமாணமுதலியவற்றின் உத்தேச இலக்கண பரீட்சை பண்ணப்படாது, அவ்வளவும் அவற்றின் உண்மை அறிவுண்டாகாது. அங்ஙனம் இந்நூலது வழக்கு உத்தேசமும், இலக்கணமும், பரீட்சையும் என மூன்றுவகைத்து.

உத்தேசமாவது பெயர் மாத்திரையாற் பொருளைச் சொல்வது.

இலக்கணமாவது சிறப்பியல்பு. எங்ஙனமெனின் ஆவிற்குத் தாடி முதலிய உடைமை.

இலக்கியத்திற்கு, இலக்கணம் பொருந்துமோ பொருந்தாதோ என்றாராய்தல் பரீட்சை.

ஆதலின் இவ்விலக்கணபரீட்சைகள் பிரமாணாதிகளுடைய உண்மையறிவின்பொருட்டு ஒருதலையாய் வேண்டின. அவற்றுள்ளும் முதற்கண் உத்தேசித்த பிரமாணத்திற்கு இலக்கணம் முறையே கூறப்படும்.

## ௧. பிரமாணம்.

பிரமைக்குக் காரணம் பிரமாணம். இதிற் பிரமாணம் இலக்கியம், பிரமாகரணத்தன்மை

---

மனுடபிறப்பிபாதல் வேண்டும் என்றறிவான்—இவ்வகை புரிதலறம் இவ்வகை புரிதல் மறம் என்றறிவான். ஆதலால் தர்க்கவித்தியை வீட்டைதற்கு வழியாகும் என ஒருபடித்தாய் எவரும் கொள்ளற்பாற்று.

மேனிக்காட்டியதில் கௌதமர் கூறிய மதசாரம் அபத்தமாயிநும் அவர் கூறிய பிரமாணம் வழுவுறுமெனக் கார்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம். அற்றாயிற் பிரமாணம் பிரமைக்குக் கரணமாயின் அதற்குப் பயன் கூறல்வேண்டும்; கரணத்திற்குப் பயனுடைமை நியமமாதலின். அஃதொக்கும்; அதற்குப் பிரமையே பயன். பயனாவது சாதித்தல். துணித்தற் கருவியாகிய கவியத்திற்குத் துணித்தலேபயன்.

**பிரமை.**—எதனது கரணம் பிரமாணமென்று கூறப்பட்டது அப்பிரமையாவது யாது? மெய்ம்மை அநுபவம் பிரமை; மெய்ம்மையென்றது பொய்ம்மையாகிய ஐயத்திரிவு தருக்க உணர்வுகட்கு விலக்கு. அநுபவம் என்றது நினைவிற்கு விலக்கு. அது நினைவிற்கு அயலாகிய உணர்வு.

**கரணம்.**—கரணமாவது யாது? உயர்ந்தகாரணம் கரணம்.

**காரணம்.**—அக்காரணமாவ தியாதெனிற் கூறுதும். நியதமாய்ப் பிறிதொன்றற் காதலின்றிக் காரியத்திற்கு முன்னிற்றல் உடையது யாது, அது காரணம்; ஆடைக்கு நூல் நாடா முதலியனபோல்வ. ஆடை தோன்றுழித் தன்னியல்பின் வந்த கழுதை முதலியவற்றிற்கு முன்னிற்றல் உண்டன்றே. ஆயினும் அது நியமமன்று. நூலுருவிற்கு நியதமாய் முன்னிற்றல் உண்டன்றே எனின், அது பிறிதொன்றற்காதல்; ஆடையுருத்தோற்றத்தமைதலின், ஆடையைக் குறித்துங் காரணமெனிற் கற்பனை பெருகும். ஆதலிற் பிறிதொன்றற் காகாமையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிற்பதன்தன்மை காரணத்தன்மை. நியதியாற் பிறிதொன்றற்காகாது அதின் பின்னிற்பதன் தன்மை காரியத்தன்மை.

ஒருவன் காரியத்தாலே தொடரப்பட்ட அந்நுவயவியதிரேகி காரணமென்றான், அது பொருந்தாது; நித்தியவிபுவாயவான் முதலியவற்றிற்குக் காலத்தானும் இடத்தானும் வியதிரேகமின்மையிற் காரணம்அன்மை வரவேண்டுதலின்.

சமவாயிகாரணம்.—அக்காரணமும், சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்னும் கூறுபாட்டால் மூவகைப்படும். அவற்றுள் எதன்கட்சமவேதித்துக் காரியந் தோன்றும், அது சமவாயிகாரணம்; நூல்கள் ஆடைக்குச் சமவாயி காரணமாதல் போல்வ. நூலின்கண்ணே ஆடை சமவேதித்துத் தோன்றும், நாடா முதலியவற்றின் இல்லை.

அற்றாயின் ஆடைக்கு நூலோடும் நாடாமுதலியவற்றோடுஞ் சம்பந்தமுளதாக, நூலின்கண்ணே ஆடை சமவேதித்துத் தோன்றும்—நாடா முதலியவற்றின்கண் இல்லையென்பது எங்ஙனம்? அஃதொக்கும், அச்சம்பந்தம், சையோகமும் சமவாயமுமென இருவகைப்படும். அவற்றுள் நீக்கம் இன்றிருப்பனவற்றின் சம்பந்தம், சமவாயம், ஏனையவற்றது சையோகமே. நீக்கமின்றிருப்பன யாவை? எவற்றுள் ஒன்று மற்றொன்றைப்பற்றியே நிற்கும், அவை நீக்கமின்றிருப்பன, எங்ஙனம்? அவயவாவயவிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணகுணிகள், வினைவினையுநர்கள், சாதிவடிவுகள், விசேடநித்தியப்பொருள்கள் என்பனவே. அவயவிமுதலியன முறையே கெடாதனவாய அவயவமுதலியவற்றைப் பற்றியே நிற்கும்; கெடுமவதியிற் பற்றுமையே நிற்கும். அது கேட்டின் ஆடைபோலவும் பற்றுக்கோட்டது கேட்டிற் குணம்போலவும். கெடுத்தற்றன்மையாவது கெடுதற் காரணக்கூட்டங்கூடுதல். நூல்ஆடைகளும் அவையவஅவயவிகளாதலின், அவற்றது சம்பந்தம் சமவாயம்; நீக்கமின்றியிருத்தலின். காடாஆடைகட்காயிற் சமவாயமின்று; நீக்கமின்றிருத்தலின்மையின். காடா ஆடையைப்பற்றி நிற்றலும் இன்று. ஆதலின் அவற்றிற்குச் சையோகமே. ஆதலின் இவ்வணம் ஆடைநூலிற் சமவேதம். எதன்கட் சமவேதித்துக் காரியந்தோன்றும், அது சமவாயிகாரணம், ஆதலின்நூல்களே ஆடைக்குச் சமவாயிகாரணம்; காடா முதலியன அல்ல. ஆடையுந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். இங்ஙனம் மட்பிண்டமும் குடத்திற்குச் சமவாயிகாரணம். குடமுந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம்.

அற்றாயின் எப்பொழுது குடமுதலியன தோன்றும் அப்பொழுதே தற்புணருருவ முதலியனவுந் தோன்றும்—ஆதலின் ஒருகாலத்திற்றோன்றின—ஆதலிற் குணகுணிகள் இடவலக்கோடுபோலக் காரியக் காரணத்தன்மையேயில்லை, முற்பிற்பாடு இன்மையின்—ஆதலிற் குடந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயி காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்று.—சமவாயிகாரணங் காரணவிசேடமா
தலின் எனிற் கூறதும்.

குணகுணிகட்கு ஒரு காலைத் தோற்றமின்று.
எங்ஙனமெனில் பொருள் குணமிலியாயே மு
ற்றோன்றும். பின் அதிற் சமவேதித்துக் குண
ங்கடோன்றும். ஒரு காலத்தோற்றமாயிற் கு
ணகுணிகட்கு, ஒரு காரணக்கூட்டத்தனவாத
லில் வேறுபாடில்லாதல் வேண்டும். காரியவே
றுபாடு காரணவேறுபாட்டின் நியதமாதலின்.
குணமிலியேயாய குடம் குணங்கட்கு முன்னி
ற்பதாதலின், பொருள் குணங்கட்குச் சமவா
யிகாரணமாம். அப்பொழுது காரணவேறுபா
டுமுண்டு. குடங் குடத்தைக் குறித்துக் கார
ணமன்றே. ஒன்றற்கே முற்பிற்பாடின்மையி
ன். தானே தன்னைக் குறித்து முன் நிற்பதும்
பின் நிற்பதுமில்லை, தன் குணங்களைக் குறித்
து முன் நிற்றலின் பொருள் குணங்கட்குச் ச
மவாயிகாரணமாம்.

அற்றேயின் இங்ஙனமாயின் பொருள் முற்க
ணத்திற் கட்புலமன்மையாதல் வேண்டும். அரு
வப்பொருண்மையாதலில்; காற்றுப்போல. எ
ப்பொருள் பரிதா உற்பூதவுருவமுடையது, அ
ப்பொருளே கட்புலப்படுவது, பொருண்மை
யுமாதல் வேண்டும்; குணத்திற்கு இடனாதற்ற
ன்மையின்மையின். குணத்திற்கு இடனாதல்
பொருளென்பது இலக்கணம். அஃதொக்கும்,
மிகவு நுண்ணிய குடத்திற் குடம் முதற் கண
த்திற் கட்புலனாற் கவரப்படாதாயின் அப்
பொழுது நமக்கு இடையூறியாது? ஆதலின் மு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்னர்க்குணமிலியாயே குடந் தோன்றுமென்னும் இது துணிவு. இரண்டு முதலிய கணங்களிற் கட்புலனாற் கவரப்படும். முற்கணத்திற் பொருளன்மையாதலில்லைச் சமவாயிகாரணம் பொருளென்னும் இலக்கணப்பொருத்தத்தால் தருதியால் குணத்திற்கிடனுமாதலின்.*

* நமது தார்க்கிகர் கடுந் திடரினும் முன்னைத உண்மை றைக்குமிடக்கும் திரவியங்களைக் கைக்கொள்ளும் நிட்சணமும் உடையவரேனும் சிறுபான்மை வழுவுவது நூதைபல்ல. முன்னர்க்குணமிலியாயே பொருள் தோன்றும், அதினின்று குணந் தோன்றும் என்றும் இவரமக்குந் துணிவன்று. இவ்வாசிரியர் தாமே சொல்லுகிறபடி திரவியமென்பது குணத்திற் கிடனாவதென்றும் இலக்கணமுடையது. குணத்திற் கிடனாவதாந் தன்மை முற்கணத்திலிலதாயின் அக்கணத்தில் அதைத் திரவியமென்று கொள்வதெவ்வண்?

திரவியமென்பது உளதாயதொன்று. உளதொன்று சொல்லற்பாலது யாது யாதோ, அது அது யாதேதுமோர் தன்மையிலுளதாகவேண்டும். தன்மையின்றியும் பொருளுளதாமென்பது அசாத்தியமாக்கிடுமாம். எங்ஙனமெனின் திரவியமின்னதென்றே, அத்திரவியம் பெரியதேனும் சிறியதேனும், ஆனதாக, அறுதக்கதேனும் மேருத்துமேனும் ஒரிடத்ததாக் கொளவேண்டுமே. அப்பொருள் கண்ணுக்குத் தோன்றுவதாயின், உருவத்தன்மையுடையதாயும், தோன்றாதாயின் அருவத்தன்மையுடையதாயும் இருக்கவேண்டுமே. இவைபோல்வனவற்றால் பொருள் உளதென்றறியுங்கால் அஃது இன்ன இன்ன பரிமாணம் இருக்கின்றதென்றறியும் அறிவு விடைபடுமே தன்மை. இத்தன்மையே குணம். ஆதலால் குணமென்பது, தானே திரவியமாகாது, தான் திரவியத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசமவாயி காரணம்.—சமவாயிகாரணத் தனுடனிருப்பதும், துணிதற் காரணத்தன்மையு டையதுமாயிருப்பது அசமவாயிகாரணமென்று கூறப்படும். ஆடைக்கு நூலியைபு அசமவாயி காரணம்போல்வ. நூலியைபாகிய குணத்திற்கு, ஆடை, சமவாயிகாரணமுங் குணியுமாகிய நூல் களினுள்ளே சமவேதிப்பிக்குதலின் சமவாயிகார ணத்தனித்தாயிருத்தலின் பிறிதொன்றற்கு ஆகா மையும் நியதியுமாகிய முன்னிற்றற்றன்மையால் ஆடையைக் குறித்துங் காரணமாதலின். இங்ங னம் நூலுருவம் ஆடையை அடைந்த உருவிற்கு அசமவாயி காரணம். அற்றாயின் ஆடையுருவி

---

னின்று பிறிதொன்றுகாரணப்த் திரவியத்தைச் சேர்க்கின் றதாய் உள்ளத்தே யுத்தியினாற் பகுக்கப்பட்டுப் பிறர்க் கு உபயோகமாகப் பொருட்டுப் பெயர் பிரிதுகொடுக்கப் பட்டுக் கிடக்கும் பரோசிருட்டியென்றுகொள்க.

குணமென்பதை பரோசிருட்டியாகக்கொண்டு, மாந் தின் கண்ணே கிடந்த குணத்திற்குத் திரவியத்தின்க ண்ணே சமவாயந் தோன்றிற்று—ஆதலால் திரவியந் தோன்றுங்கால் குணந் தோன்றியதில்லையென்று சொ ல்லின் ஒருவாறு பொருந்தும். எங்ஙனமெனின் குடம் என்பது தோன்றியபின் அதின் உருவம் குடத்தினின்று ம் எழுந்து கட்பொறியின் கிழ்ந்த கதிர்களால் கிரகிக்க ப்படுவதாதலின் அக்கதிர்ச் சொரூபமாகிய உருவமே குடத்தின்குணமாகக் காண்கின்றவனுடைய உள்ளத்தி ற்கொளக் கிடப்பதால், அக்குணம் குடத்தின் சமவேத மென்றும் அதற்குக் குடஞ்சமவாயமென்றும் குடந்தோ ன்றியபோது குணந்தோன்றவில்லையென்றும் சொல்வதை யையும். ஆயினும் இவ்வாசிரியன் இக்கருத்தைப் பற்றிக் கூறினனென்று நாம் சொல்ல வல்லேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்கு ஆடை சமவாயிகாரணம். ஆதலில், தன்னையடைந்தேயிருக்கின்ற ஒரு தருமத்திற்கு ஆடை உருவைக் குறித்து அசமவாயிகாரணத் தன்மை கூறத்தகும்; சமவாயிகாரணத்தணித்தாயிருத்தலின்.

நிமித்தகாரணம்.—யாதொன்று சமவாயிகாரணமும், அசமவாயிகாரணமும் அன்றாய்மற்றுங் காரணமாம் அது நிமித்தகாரணமென்று கூறப்படும். நாடா முதலிய ஆடைக்கு நிமித்தகாரணம்.

இக்காரணங்கள் மூன்றும் உள்பொருளுக்கே; இல்பொருட்காயின் நிமித்தகாரணம்மாத்திரம். அதற்கு ஓரிடத்துஞ் சமவாயமின்மையின்; சமவாயம் உள்பொருள் இரண்டின் தருமமாதலின். இக்காரணங்கள் மூன்றினுள் யாதாயினும் மேவலாற்றானும் உயருமாயின் அதுவே கரணம். ஆதலின் பிரமைக்குக் கரணம் பிரமாணமென்னும் இவ்விலக்கணந் துணியப்படும்.

உணரப்படாத பொருளினது உணர்வு பிரமாணமென்பது பிரமாணஇலக்கணமெனின் அஃதன்று. ஒரு குடத்தின்கண்ணே குடமிது குடமிது என்றுணரப்பட்டதை உணருந்தாரைகொள் உணர்வுகட்கு அப்பிரமாணியம் வரவேண்டுதலின். வேறுவேறாகிய கண் விசேடத்தோடு கூடிய பொருட்கவர்ச்சியான் உணரப்படாத பொருளினது உணர்தற்றன்மை உண்டென்பதன்று; காட்சியான் உன்னிய காலவேறுபாட்டினது தெரியாமையின். வேறுபாடு தெரியின் கிரியை முதற் சையோகமீறாய நான்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்கும் ஒருமையபிமானமின்றுதல் வேண்டும். பிரமாதருப் பிரமேயம் முதலிய பல காரணங்கள் பிரமைக்குள். இவையெல்லாங் காரணமோ அல்லதல்லவோ கூறுதும். பிரமாதாவும் பிரமேயமுமிருப்பினும் பிரமை பிறவாமையினானும் இந்திரியசையோகாதியுண்டாயின், விரைவினாற் பிரமை பிறத்தலினானும் இந்திரிய சையோகாதியே கரணம்; பிரமாதா முதலியனவல்ல. சந்தத் தன்மை விசேடமின்றாயினும் இவ்வுயர்ச்சியானே இதற்குப் பிரமாதா முதலியவற்றின் நின்றும் அதிசயமாதலின் உயர்ந்த காரணங் காரணமென்று கூறப்பட்டது. இந்திரியசையோகாதியே பிரமைக்குக் கரணமாதலிற் பிரமாணம் பிரமாதா முதலியன அல்ல. அப்பிரமாணங்கள் நான்கும் அங்ஙனம்.

இனிக் காட்சி அநுமாந உபமாந உரைகள் பிரமாணங்கள்.

---

## காட்சி.

### சாட்சாற்காரிப்பிரமை, கரணம்.

காட்சியாவதியாது? சாட்சாற்காரிப்பிரமைக்குக் கரணம். காட்சியாதிஇந்திரியத்தாற்றோன்றுமது, சாட்சாற்காரிப்பிரமை. அஃதும் சவிகற்ப நிருவிகற்பக் கூறுபாட்டால் இருவகைப்படும். அதற்குக் கரணம் மூவகை; ஓரிடத்திந்திரியம், ஓரிடத்துப் பொருள்இந்திரியக்கூட்டம், ஓரிடத்து ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விடத்திந்திரியங் கரணம்? எப்போது நிருவிகற்ப உருவப் பிரமை பலமாம், அப்போது இந்திரியங் கரணம். அவ்வாறே உயிர் மனத்தோடு கூடும்; மனம் இந்திரியத்தோடு; இந்திரியம் பொருளோடு; இந்திரியங்கட்கு அணைந்தவை விளக்குந் தன்மை நியமமாதலின். ஆதலிற் பொருளோடு கூடிய இந்திரியத்தாற் பெயர் சாதி முதல் இவையில்லாத பொருள்மாத்திரமசப்படுக்கும் நிருவிகற்ப ஞானந் தோன்றும். அவ்ஞானத்திற்கு இந்திரியங் கரணம்; துணித்தற்கு நவியம் போல; பொருளிந்திரியக் கூட்டம் அவாந்தரவியாபாரம். நவியத்திற்குமரத்தோடு கூட்டம் போல; நிருவிகற்பஞானம் பலம்; நவியத்திற்குத் துணித்தல் போல.

எவ்விடத்துப்பொருளிந்திரியக்கூட்டங் கரணம்? எப்போது, கூறப்பட்ட நிருவிகற்பத்தின் பின்னர் பெயர் சாதி முதலியவையுள்ள, சாத்தனிவன், பார்ப்பானிவன், கரியனிவன் என்னும் விசேட விசேடியத் தன்மை அகப்படுக்குஞ் சவிகற்பஞானந் தோன்றும், அப்போது பொருளிந்திரியக்கூட்டங் கரணம்; நிருவிகற்பம், அவாந்தர வியாபாரம்; சவிகற்பஞானம் பலம்.

எவ்விடத்து ஞானங் கரணம்? எப்போது, கூறப்பட்ட சவிகற்பத்தின் பின்னர் வெறுப்பு விருப்புப் புத்திகடோன்றும், அப்போது நிருவிகற்பஞானங் கரணம்; சவிகற்பம் அவாந்தரவியாபாரம்; வெறுப்பு முதலிய புத்திகள் பலம்.

சவிகற்பமுதலியவற்றிற்கும் இந்திரியமே காரணமென்பாருமுளர். நடுவுதோன்றியன வெவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவோ அவையனைத்தும் அவாந்தரவியாபாரம்.

அறுவகைக்கூட்டம்.—பொருளிந்திரியங்களுடைய சாட்சாற்காரிப்பிரமைக்கு ஏதுவாகிய கூட்டம் யாது; அஃது அறுவகையே. அவை சையோகம், சையுத்த சமவாயம், சையுத்த சமவேத சமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேடவிசேடியத்தன்மையென்பனவே.

எப்போது கண்ணுற் குடவிடைய ஞாகந்தோன்றும், அப்போது கண்ணிந்திரியம், குடம் பொருள், அவற்றது கூட்டஞ் சையோகமே; நீக்கமின்றிருத்தலின்மையின்; இங்ஙனம் மநம் என்னும் அகவிந்திரியத்தால் ஆன்மவிடைய ஞாநம் நானென்று தோன்றும். அப்போது மநம் இந்திரியம்; ஆன்மா பொருள்; அவற்றது கூட்டஞ் சையோகமே.

எப்போது சையுத்த சமவாயக் கூட்டம்? எப்போது கண்முதலியவற்றாற் குடமடையுருவம் முதலியவை, குடத்தின்கண் நீலஉருவமுண்டென்று கவரப்படும், அப்போது கண்ணிந்திரியம்; குடமடையுருவமுதலியவை பொருள்; அவற்றினது கூட்டஞ் சையுத்தசமவாயமே. எங்ஙனம்? கண்ணோடு சையுத்தமான குடத்தில், உருவிற்குச் சமவாயமாதலின். இங்ஙனம் மநத்தால் ஆன்ம சமவேதமாகிய இன்பமுதலியவை கவரப்படும், அப்போதும் இக்கூட்டமே. குடமடைபரிமாணமுதலியவற்றின் கவர்ச்சியின் நான்கு வகைக்கூட்டமும் இக்காரணமென்று வேண்டப்படும். சையுத்தசமவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் உண்டாயினும் அஃதில்லாதபோது, சேய்மைக்கட்பரிமாணங் கவரப்படாமையின். நான்குவகைக் கூட்டம் எங்ஙனம்? இந்திரிய அவையவங்களோடு பொருளவயவங்கட்கு இந்திரிய அவையவியோடு பொருள் அவையவங்கட்சென்று.

எப்போது சையுத்த சமவேத சமவாயக் கூட்டம்? எப்போது கண்முதலியவற்றாற் குடவுருவிற் சமவேதமான உருவத்தன்மை முதலிய சாதி கவரப்படும், அப்போது கண் இந்திரியம்; உருவத் தன்மை முதலிய சாதிபொருள். அவற்றது கூட்டஞ் சையுத்த சமவேத சமவாயமே. எங்ஙன்? கண்ணொடு சையுத்தமான குடத்திலுருவஞ்சமவேதம்; அதின் கண்ணுருவத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவாயக் கூட்டம்? எப்போது செவிப்புலனால் இதுசகாரமென்றோசை கவரப்படும் அப்போது செவி இந்திரியம்; ஓசைபொருள்; அவற்றினது கூட்டஞ் சமவாயமே. செவிக்கு வான்வடிவமுண்மையின் ஓசைக்கு வான்குணத்தன்மையுண்மையின்; குணகுணிகட்குச் சமவாயமாதலின்.

எப்போது சமவேத சமவாயக் கூட்டம்? எப்போது செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மைமுதலிய சாதி கவரப்படும், அப்போது செவி இந்திரியம்; ஓசைத்தன்மை முதலிய சாதி பொருள்; அவற்றினது கூட்டஞ் சமவேத சமவாயம். செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மைக்குச் சமவாயமாதலின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது விசேடவிசேடியத்தன்மைப்பொருள் இந்திரியக் கூட்டம்? எப்போது கண்ணோடு சையுத்தமான நிலத்திற், குடமில்லென்று குடமுதலியவற்றின்மை கவரப்படும், அப்போது கண்ணோடு சையுத்தமான நிலத்திற்குக் குடமுதலியவற்றின்மை விசேடியம். குடமில்லது நிலமென்றுமிடத்துக் குடமுதலியவற்றின்மை விசேடம். எப்போது மனத்தோடு சையுத்தமான ஆன்மாவின் என்னிடத்தின்பமில்லென்று கவரப்படும். அப்போது மனத்தோடு சையுத்தமான ஆன்மாவுக்கு இன்பமுதலியவற்றின்மை விசேடியம். இன்பமிலேனென்றுமிடத்தின்பமின்மை விசேடம். எப்போது செவியிற் சமவேதமான ககாரத்திற் சகாரத்தன்மையில்லென்று கவரப்படும், அப்போது செவியிற் சமவேதமான ககாரத்திற்குச் சகாரத்தன்மை விசேடியம். சகாரத்தன்மையில்லது ககாரமென்புழிச் சகாரத்தன்மையின்மை விசேடமாதலில். இங்ஙனம் தருக்கத்தார் கூறுநம். ஐவகைச் சம்பந்தத்தின் சம்பந்தியினது விசேட விசேடியத் தன்மை இலக்கணமான பொருளிந்திரியக் கூட்டத்தால் இன்மை கவரப்படுமே. இங்ஙனஞ் சமவாயமும் கண்ணோடு சையுத்தமான நூலிற்கு விசேட விசேடியமான ஆடைச் சமவாயம். இந்நூல்களிலே ஆடைச் சமவாயமென்று கவரப்படும். ஆதலின் இங்ஙனம் அறுவகைக் கூட்டம் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுமானம்.

இலிங்க பராமரிசம் அநுமானம். எதினால் அநுமிக்கப்படும் அஃது அநுமானம். இலிங்கபராமரிசத்தானே பொருள் அநுமிக்கப்படும். ஆதலின் இலிங்கபராமரிசம்அநுமானம். அது புகை முதலிய ஞானம்; அநுமிதியைக் குறித்துக்கரணமாதலின். தீ முதலிய ஞானம் அநுமிதி; அதன் கரணம் புகை முதலிய ஞானம்.

இலிங்கம் யாது? அதனது பராமரிசம்யாது? கூறுதும். வியாத்திவலத்தாற் பொருளையுணர்த்துவது இலிங்கம். எங்ஙனம்? புகை தீக்கிலிங்கம். அங்ஙனமன்றே யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்னும் உடனிகழ்ச்சி நியமம் வியாத்தி. அது கவரப்படுங்காலே புகை தீயை உணர்த்தும். ஆதலின் வியாத்திவலத்தாற்றீயநுமாபகம். ஆதலிற் புகை தீக்கிலிங்கம். அதனது மூன்றாம் ஞானம் பராமரிசம். அங்ஙனமன்றே முன்னே அட்டின்முதலியவற்றின் மறித்து மறித்தும் புகைகண்டு தீக்காணுகின்றான், அம்மறித்துக் காண்டலாற் புகை தீக்களது தன்னியல்பான சம்பந்தம் துணியாநின்றான், யாண்டுப் புகை ஆண்டுத்தீயென்று.

யாண்டு மித்திரைமகன்மை ஆண்டுக்கருமையென்பதொக்கும். ஆயினும், மித்திரைமகன்மை கருமைகட்குத் தன்னியற்கைச் சம்பந்தமின்று. மற்றென்னெனின் ஔபாதிகமே; அடகுமுதலிய உணவுப் பரிணாமமான உபாதியுண்மையின்; அங்ஙனமன்றே கருமையின் மித்திரைமகன்மை பிரயோசகமன்று. மற்றென்னெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் அடகு முதலிய உணவுப் பரிணதி வேறுபாடே பிரயோசகம். பிரயோசகமும் உபாதியென்று கூறப்படும். புகைதீக்களது சம்பந்தத்தில் ஒருபாதியுமின்று; தகுதியல்லது சங்கித்தற்பொருட்டருமையாதலின் தகுதியது காணப்படாமையின். யாண்டுபாதியுண்டு ஆண்டுக் காணப்படும். எங்ஙனம்? தீக்குப் புகையொடு சம்பந்தத்தில் ஈர விறகின் கூட்டம், கொலைமைக்கு அதன்மசாதகத்தோடு கூடிய சம்பந்தத்தில் இழிவுடைமை. உபாதி மித்திரைமகன்மைக்குக் கருமை சம்பந்தத்தில் அடகு முதலிலிய உணவுப் பரிணதி வேறுபாடு. ஈண்டுப்புகைக்குத் தீயுடனிகழ்ச்சியில் ஒருபாதியுமின்று.

உண்டாயின் அப்போது நிலம்போலக் காணப்படும். ஆதலிற் காட்சியின்மையினில்லையென்னுந் தருக்கத்துணையுடைய உணர்வின்மையோடு கூடிய காட்சியானே உபாதியின்மை துணியப்படும். அங்ஙனமன்றே உபாதியின்மையிற்றோன்றிய வாசனையோடு கூடிய மறித்துக்காண்டலிற்றோன்றிய வாசனையோடு கூடிய உடனிகழ்ச்சி கவருஞ் சாட்சியானேபுகைதீக்களது வியாத்தி துணியப்படும். ஆதலின் புகை தீக்களுக்குத் தன்னியற்கைச்சம்பந்தம். ஔபாதிகமன்று. தன்னியற்கைச் சம்பந்தம், வியாத்தியென்று கூறப்படும்.

ஆதலின் இந் நியாயத்தாற் புகை தீக்களது வியாத்தி கவரப்படுகையின் அட்டிலிற் புகை ஞானம் யாது, அதுமுதலது; மலை முதலிய பக்கத்திற் புகை ஞானம் யாது, அது இரண்டாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பாடு முன் கவரப்பட்டதாகிய புகை நீக்க ளாறு வியாத்தியை நினைத் தம்மலையின்கண்ணே பின்னர்ப் புகையைப் பராமரிசிக்கின்றான் இம்மலையிற்றீயால் வியாத்தமான புகையுண்டென்று. இப்புகைஞானமூன்றாவது. இஃதொரு தலையாய் வேண்டப்பட்டது. வேறாயின் யாண்டுப் புகை ஆண்டுத் தீயுண்டாக ஈண்டுத்தீயிருத்தலெங்ஙனம்? ஆதலின் ஈண்டுப் புகையுண்டென்னும் ஞானம் வேண்டப்படும்.

இதுவே இலிங்க பராமரிசம். அநுமிதியைக் குறித்துக் கரணமாதலின் அநுமானம். அதனால் இம்மலையிற்றீயுண்டென்னும் அநுமிதிஞானந் தோன்றும்.

ஆகையின் முன்னிரட்டலிற் புகை ஞானம் யாதநீயநுமாபகம் எங்ஙனம்? அன்று; அஃது ஒக்கும்; வியாத்தி கவரப்படாமையின், வியாத்தி கவரப்படுகையின் அநுமிதி தோன்றலின். ஆயின் வியாத்தி துணிந்தபின் பட்டிலின்கண்ணே நீயநுமிக்கப்படும். அநுபலத்திப்பொருளிலும் துணிந்த பொருளிலும் நியாயம் வழங்காது. மற்றென்னெனில்ஐயப்படுபொருளில். ஆயின் மலையடைதன் மாத்திரமாகிய மகற்குப் புகைஞானந் தீயை அநுமிக்கப்பண்ணாததென்? இவ்விடத்தையறுண்டென்றே சாதித்தல் வாதித்தலாகிய பிரமாணமின்மையால், ஐயம் அநுமானத்தாலடைதலின். அஃதொக்கும்; கவரப்படாத வியாத்தியான் போலக் கவர்ந்து மறந்து கவர் வியாத்தியுடைய மகற்கும் அநுமானம் பிறவாமையால், வியாத்தி நினைவும் அநுமிதியேதுவாதலின். புகை கண்ட[illegible]ழுந்த வாசனையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையனாய் வியாத்தியை நினைப்பான், ஏதேது புகை யுறுவது தீயது, எங்ஙனம், அட்டிலென்று. ஆதலிற் புகைக் காட்சி தோன்றலில் வியாத்திநினைவு தோன்றுகையின் இதுவும் புகையுடைத்தென்னும் புகை ஞாபகம் யாது, அது மூன்றாவது. அதுவே தீயையநுமிக்கப்பண்ணும், மற்றையவல்ல. அதுவே இலிங்கபராமரிசம். ஆதலில் இலிங்க பராமரிசம் அநுமானமென்னுமிது துணியப்படும்.

## தற்பொருட்டநுமானம்.

அவ் வநுமானமும் தற்பொருட்டும் பிறன்பொருட்டுமென இருவகைப்படும். தற்பொருட்டுத் தன்னுணர்வினது. அங்ஙனமன்றே, தானே அட்டின் முதலியவற்றின் விசிட்டமாகிய காட்சியாற் புகைத்தீக்களது வியாத்தியைக் கவர்ந்து, மலையருகடைந்து அதன்கட் டீயின் ஐயமுடையனாய் மலையின் நிகழ்வதாய் இடைவிடாத மூலத்ததாய் விண்ணுரிஞ்சும் புகை ஒழுக்கைக் கண்டு புகைகாண்டலாலெழுந்த வாசனையுடையனாய், யாண்டெப்புகை ஆண்டுத்தீயென்று வியாத்தியை நினையாநின்றான், ஈண்டுப்புகையுண்டென்றுணராநின்றான், ஆதலின் இம்மலையிற்றீயுண்டென்று தானே யுணராநின்றான். அதுவே தற்பொருட்டநுமானம்.

## பிறன்பொருட்டநுமானம்.

தான் புகையாற் றீயையநுமித்தும் பரனைக்குறித்துப் போதிக்கும்பொருட்டுப் பஞ்சாவயவ அநுமானவாக்கியம் யாது கூறுகின்றான், அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறன்பொருட்டநுமானம். அஃதெங்ஙனம்? மலைதீயுடைத்து; புகையுண்மையான்; யாதுயாது புகையுடைத்ததுவதுதீயுடைத்து எங்ஙனம், அட்டில்; இதுவும் அங்ஙனம் ஆதலில் அங்ஙனம்; என்பதே. இவ்வாக்கியத்தானே பிரதிபாதிக்கப்பட்ட பஞ்சரூபத்தோடு கூடிய அவ்விலிங்கத்தாற் பரனுந் தீயையுணரா நின்றான். ஆதலின் இது பரார்பொருட்டநுமானம்.

அந்வயவியதிரேகி.

இதின், மலைக்குத் தீயுண்மை சாத்தியம். புகையுண்மை ஏது. அதுவும் அந்துவயவியதிரேகி; அந்துவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுடைமையின்.

அங்ஙனம், யாண்டுப்புகை, ஆண்டுத்தீ, எங்ஙனம், அட்டில் என்பது அந்துவயவியாத்தி; அட்டிலிற் புகைதீக்களதந்துவயஉண்மையது காட்சியின்.

இங்ஙனம் யாண்டுத்தீயில்லை ஆண்டுப் புகையுமில்லை, எங்ஙனம், மடுவில்; என்பது வியதிரேக வியாத்தி. மடுவிற்புகைதீக்களதுவியதிரேகஉண்மையது காட்சியால் வியதிரேக வியாத்திக் கிது முறை.

அந்துவயவியாத்தியில் யாது வியாப்பியம், அதனின்மை சண்டுவியாபகம், யாதுவியாபகம் அதனின்மை சண்டுவியாப்பியமென்று அங்ஙனங் கூறப்பட்டது. உண்மை வியாப்பியமும் ஏனைவியாபகமும் இன்மைக்கு மாறுய்வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலில் இங்ஙனம் புகையுண்மையெதுவின் அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுண்டு.

வாக்கியத்தில் அந்நுவய வியாத்தி யொன்று காட்டப்பட்டது. எது அது ஒன்றானும் பயனுதலின். அவற்றுள்ளும் அந்நுவயஞ் செவ்விதாதலிற், காட்சி செந்நெறியாற் சித்திக்கும் பொருட்குக் கொடுநெறியாற் சாதித்தல் பொருந்தாமையின். வியதிரேகவியாத்தியின்மையின்று. ஆதலின் இங்ஙனம் புகையுண்மை அந்நுவயவியதிரேகையே.

## கேவலவியதிரேகி.

இங்ஙனம் வினையவும். உய்தலுடம்பு சான்மகம், பிராணாதியுடைமையின். யாது சான்மகமன் றது பிராணாதியுடைமையதன்று, எங்ஙனம், குடம்; இவ்வுய்தலுடம் பங்ஙனமன்று. ஆதலின் இங்ஙனமன்று. இதின், உய்தலுடம்பினது சான்மகத்துவஞ் சாத்தியம், பிராணாதியுடைமை எது. இது கேவலவியதிரேகி; அந்நுவய வியாத்தியின்மையின். அங்ஙனமன்றே, யாது பிராணாதியுடையது அது சான்மகம், எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை. உய்தலுடம்பெல்லாம் பக்கமே.

இலக்கணமுங் கேவலவியதிரேகியேது. எங்ஙனம்? பிரிதிவியிலக்கணங் கந்தமுடைமை. இவ் விவாதபதம், பிருதிவி கந்தமுடைமையின். யாது பிரிதிவியன்று அது கந்தமுடையதன்று, எங்ஙனம்? புனல். இதில் யாது கந்தமுடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது, அது பிரிதிவி, எங்ஙனம், இது என்று திட்டாந்தமில்லை.

பிரமாண இலக்கணமாகிய பிரமாகரணத்துவமும் அவ்வாறே. அங்ஙனமன்றோ, காட்சிமுதலியன பிரமாணமென்று வழங்கத்தக்கன. பிரமாகரணத்துவமாதலின்; யாது பிரமாணமென்று வழங்கப்படாதது பிரமாகரணமன்று. அது எங்ஙனம்? காட்சிப்போலிமுதலியன. இதில் யாது பிரமாகரணம் அது பிரமாணமென்று வழங்கத்தக்கது, எங்ஙனம் இதுவென்று திட்டாந்தமில்லை. பிரமாணமெல்லாம் பக்கஞ்செய்தலின். இதில் வழக்கம் சாத்தியம்; பிரமாணத்துவமன்று; அதற்குப் பிரமாகரணத்துவமாகிய ஏதுவினின்றும் வேறின்மையிற் சாத்தியஅவிசேடக்குற்றம் வருதலினன். ஆதலில் இங்ஙனம் கேவலவியதிரேகிகள் காணப்பட்டன.

கேவலார்நுவயி.

ஒரோவொரேதுக்கேவலார்நுவயி. எங்ஙனம்? விசேடம் அபிதேயம்; பிரமேயமாதலின். யாது பிரமேயம் அஃது அபிதேயம், எங்ஙனம் குடம்; இதுவும் அங்ஙனம். ஆதலின் இங்ஙனம். இதில் விசேடத்திற் கபிதேயத்துவஞ் சாத்தியம் பிரமேயத்துவம் ஏது. அதுவும் கேவலார்நுவயியே. யாதபிதேயமாகாதது பிரமேயமுமாகாது. எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை. எவ்விடத்தும் பிரமாணிகப் பொருளே திட்டாந்தம். அதுவும் பிரமேயமும் அபிதேயமும்.

---

அந்நுவயவியதிரேகி கேவலார்நுவயிகேவல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியதிரேகியென்று மேதுக்களுதுநடுவே. எவ்வேது அந்வயவியதிரேகி. அதுவும் பஞ்சரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கவல்லது. ஒரு ரூபத்தானுங் குறைந்த தாகாது.

அப்பஞ்சரூபங்கள், பக்கத் தருமந்தன்மை சபக்கத்திலுண்மை, விபக்கத்தினீக்கம், அவாதிதவிடையத்தன்மை, பிரதிபக்கமின்மையென்பனவாம். இப்பஞ்சரூபங்கள் புகையுடைமை முதலிய அந்வயவியதிரேகியேதுக்களினிருக்கும். புகையுடைமை பக்கமான மலைக்குத் தருமம்; மலையினமைந்திருத்தலின். இங்ஙனஞ் சபக்கத்திலுண்மை. சபக்கமாகிய அட்டின் முதலியவற்றினிருக்குமென்பது பொருள். இங்ஙனம் விபக்கமாகிய மடுவினீக்கம். ஆண்டில்லையென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை அவாதிதவிடையம். அங்ஙனமன்றே, புகையுடைமையாகிய ஏதுவுக்கு விடையஞ் சாத்திய தருமம். அது தீயுடைமை யாதானும் வாதிக்கப்படாமை கண்டிக்கப்படாதென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை பிரதிபக்கமில்லது. அங்ஙனமன்றே சாத்தியத்தின் விபரீதசாதக ஏதுக்கூறுபாடு பிரதிபக்கமென்று கூறப்படும். அதுவும் புகையுடைமை ஏதுவினின்று தோன்றுமையின். ஆதலின் இங்ஙனம் பஞ்சரூபங்கள் புகையுடைமை ஏதுவிலிருக்கும். ஆதலின் இப்புகையுடைமை தீயுடைமையது கமகம். அது தீயுடைமை சாதகம். தீயினது பக்கதருமத்துவம் ஏது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினது பக்கதருமத்துவவியாற் சித்திக்கும்.

அங்ஙனமன்றே, அநுமானத்திற்கு அங்கம் வியாத்தியும் பக்கதருமத்துவமுமென இரண்டு. அவற்றுள் வியாத்தியாற் சாமானிய சித்தி, பக்கதருமத்துவவலியாற் சாத்தியத்திற்குப் பக்கதருமத்துவவிசேடம் சித்திக்கும். மலைத்தருமமாகிய புகையுடைமையாற்றீயும்மலைச்சம்பந்தமாயேய நுமிக்கப்படும். வேறாயிற் சாமானியம் வியாத்திகவர்வதானே சித்தித்தலின், அநுமானம்பயனிலி.

அந்நுவயவியதிரேகியேது யாதது பஞ்சரூபத்தோடு கூடியே நல்ல வேதுவாம். வேறாயின் வதுப்போலி; எது வல்லதென்னுமளவு.

கேவலாந்நுவயி நான்கு ரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கும். அதற்கு விபக்கத்தினீக்கமின்று. விபக்கமின்மையின்.

கேவலவியதிரேகி நான்குரூபத்தோடு கூடியே. அதற்குச் சபக்கத்திலுண்மையின்று. சபக்கமின்மையின்.

பக்கஞ் சபக்கம் விபக்கம் யாவை கூறுதும்.

ஐயமுடைய சாத்திய தருமத்தையுடைய தருமிபக்கம். எங்ஙனம்? துணிந்த புகை அநுமானத்தின் மலை.

துணிந்தசாத்திய தருமத்தையுடைய தருமி சபக்கம். எங்ஙனம்? இப்புகையநுமானத்தின்கண்ணே யட்டில்.

விபக்கந் துணிந்த சாத்தியமில்லாத தருமி. எங்ஙனம்? ஆண்டே மடு. ஆதலின் இங்ஙனம் அந்நுவயவியதிரேகி, கேவலாந்நுவயி கேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லவியதிரேகியாகிய மூன்றேதுவுங் காட்டப்பட்டன.

## ஏதுப்போலி.

அவற்றின் வேறுபட்டன ஏதுப்போலிகள். ஏதுவிலக்கண ஏதுவைப்போல விளங்குவன ஏதுப்போலிகள்; அவையும் பலவகைய; அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியயாபதிட்டம், என்னும் வேறுபாட்டால் ஐவகையே.

### அசித்தம்.

அவற்றுள்துணியாத பக்கவிருத்தி அஅசித்தம். அது ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தமென மூன்றுவகையே.

ஆசிரயாசித்தமெங்ஙனம்? வான்றாமரைமணமுடைத்து; தாமரைத்தன்மையால்; பொய்கைத்தாமரைபோல. இதில் வான்றாமரை ஆசிரயம்; அஃது மின்றே.

சொரூபாசித்தமெங்ஙனம்? சொல்அசித்தம்; கட்புலப்படுதலால், குடம்போல. கட்புலப்படுதல் ஏது. அதுவுஞ் சொற்கின்றே. சொற்செவிப் புலப்படுதலின்.

வியாப்பியத்துவாசித்தம் இருவகை. ஒன்று வியாத்திகவர்வதாகிய பிரமாணமின்மையின் மற்றையது உபாதியுண்மையின். அவற்றின், முதலதெங்ஙன்? யாது சத்து அது கணிகம், அதெங்ஙனம்? முகிற்படலம். சத்தாதியுஞ்சத்து. சோபாதிகத்தாற் சத்துக்கு வியாப்பியத்துவாசித்தங்கூறில் வேறடைந்த கணிகத்துவம் வேண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்படும். இரண்டாவதியாது? வேள்வியின் கி
கழுங் கொலை அதன்ம சாதகம்; கொலைமையா
ல்; வேள்விப்புறத்துக் கொலைபோல. இதின்
அதன்மசாதகத்தின்கட் கொலைமை பிரயோச
கமின்று. மற்றென்னை? இழிவே பிரயோசக
ம்; உபாதியென்னுமளவு. அங்ஙனமன்றே
சாத்திய வியாபகத்துவமாய்ச் சாதநத்திற் கவ்வி
யாபகத்துவமாதல் உபாதியென உபாதிலக்க
ணம். அதுவும் இழிவின்கணுண்டு. இழிவு
சாத்தியமான அதன்மசாதகத்துவத்துக்கு வியா
பகமே; யாண்டுயாண்டதன்மசாதகத்துவம் ஆ
ண்டொருதலையாக இழிவென்று. இங்ஙனஞ்
சாதகமான கொலைமையை இழிவு வியாபியா
து; யாண்டு யாண்டு கொலைமை ஆண்டொரு
தலையா விழிவின்று; வேள்வியினது பசுக்கொ
லையினிழிவின்மையின்; வேறடைந்த வியாத்
தியோடுகூடிய கொலைமை வியாப்பியத்துவாசி
த்தமே.

சாத்தியவிபரீதத்தோடு வியாத்தம், விருத்தம்.
அஃதெங்ஙனம்? சொல் நித்தம்; காரியத்தன்
மையால், வான்போல. காரியத்தன்மை சாத்திய
மான நித்தியத்துவத்துக்கு விபரீதமான அநித்தி
யத்துவத்தோடு வியாத்தம். யாதுகாரியம் அஃ
தநித்தியம். ஆகலிற் காரியத்தன்மை விருத்தம்.

வியவிசாரத்தோடு கூடியது அநைகாந்திகம்.
அஃது சாதாரண அநைகாந்திகம் அசாதாரண
அநைகாந்திகமென இருவகைத்து. அவற்றுள்
பக்க சபக்க விபக்கத்திலிருப்பது சாதாரண அ
நைகாந்திகம். எங்ஙனம்? சொல் நித்தியம்; பிர

R21856
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயத்தன்மையால்; வியோமம்போல. இதிற்பிரமேயத்தன்மையேது. அஃது நித்தஅநித்தத்திருப்பது. சபக்கவிபக்க நீக்கமியாததசாதாரணஅநைகாந்திகம். அஃதெங்ஙனம்? நிலம் நித்தம்; மணமுடைமையால். மணமுடைமை சபக்கமாகிய நித்தத்துவநின்றும் விபக்கமாகிய அநித்தத்துவநின்றும் நீக்கம்; நிலமாத்திரையினிருத்தல்.

எவ்வேதுவுக்குச் சாத்தியவிபரீதத்தைச் சாதிக்கும் ஏதுக்கூறுபாடுண்டதுவே பிரகரணசமம். எங்ஙனம்? சொல் அநித்தம்; நித்தியதருமமின்மையால். சொல் நித்தம்; அநித்தியதருமந்தோன்றாமையால், என்பதுவே. இதுவே சற்பிரதிபக்கமென்றுங் கூறப்படும்.

பிரமாணாந்தரத்தாற்றுணிந்த சாத்தியவின்மையேது வாதிதவிடையம். காலாத்தியயாபதிட்டமெனவுங் கூறப்படும். எங்ஙனம்? தீவெம்மையிலது; பொருண்மையால்; புனல்போல. இதில் பொருண்மையான ஏதுவுக்குச் சாத்தியம் வெம்மையின்மை. அதன்மைசாட்சியானே துணியப்பட்டது; பரிசனக்காட்சியால் வெம்மைதோன்றலின். ஆதலின் இங்ஙனம் அநுமானம் உணர்த்தப்பட்டது.

## உபமாநம்.

அதிதேசவாக்கியப்பொருணினைவோடு கூடிய ஆவொப்புமை அடைபிண்ட ஞானம் உபமானம். எங்ஙனம்? ஆமாவுணரானும், எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா, என்றொருகாட்டுமகனாற் கேட்டுக் காட்டிட்புக்கு வாக்கியப்பொருணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைத்துக்கொண்டு, எப்போது ஆவொப்புமைவிசிட்டபிண்டங் காணுகின்றான், அப்போதவ் வாக்கியப்பொருணினைவோடு கூடிய ஆவொப்புமை விசிட்டபிண்ட ஞானம் உபமானம்; உபமிதியைக் குறித்துக் கரணமாதலின். ஆவொப்புமை விசிட்டபிண்டங் கண்டபின்னர், இது ஆமாமொழிவாக்கியமான பிண்டமென்னும் நாமநாமிசம்பந்தஞானம் உபமிதி. அதுவே பலம்.

## உரை.

ஆத்தவாக்கியம் உரை. ஆத்தன் உள்ளபொருளை உபதேசிக்கும் தன் வாக்கியம், அவாய்நிலை, தகுதி, அண்மையுடைய பதங்களினது கூட்டம். ஆதலினானே ஆபுரவிமகன் யானையென்பது வாக்கியமன்று; ஒன்றற்கொன்றவாய்நிலையின்மையின். "தீயால் நனைக்க" என்பது வாக்கியமன்று; தகுதியின்மையின். தீ நனைத்தல்கட்கொன்றற்கொன்றுளதாகிய தகுதியின்றன்றே. "தீயால் என்னுமூன்றாவதால் நனைத்தல்" ஆகியகாரியத்தைக் குறித்துக் காரணத்தன்மைதீக்குக் கூறப்பட்டது. தீ நனைத்தல்கரணமாம்பொருட்டுத் தக்கதன்று. ஆதலிற் காரியகாரண பாவஇலக்கணசம்பந்தத்திற் றீநனைத்தல்கட்குத் தகுதியின்மையிற் றீயானனைக்கவென்பது வாக்கியமன்று. இங்ஙனம் ஒவ்வொரு யாமத்தின் ஒருங்கு கூறப்படாத "வெள்ளை—மாவைக்—கொலாக்—குணர்க" என்னும் பதங்கள் வாக்கியமல்ல. ஒன்றற்கொன்றுள்ள தகுதியுளதாயும் ஒன்றற்கொன்றவாய்நிலையுளதாயும் ஒன்றற்கொன்றண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையின்மையின். யாவை அவாய் நிலையன, தகுதியன, அண்மையன, அவையே வாக்கியம். எங்ஙனம்? "நியோதிட்டோமத்தாற் றுறக்கம் வேண்டியான்வேட்க" என்பது முதலியன. "ஆற்றங்கரையில் ஐந்து கனிகளிருக்கின்றன" "ஆவைக்குணர்தி" என்பன முதலிய, பதங்கடாமே விரையக் கூறப்பட்டன வாக்கியமாம்.

அற்றாயின், இதிற் பதங்கள் வாக்கிய நிலையன அல்ல. மற்றென்னெனிற் பொருள்கள்; கனி முதலிய ஆதேயங்கட்கே கரை முதலிய ஆதார அவாய் நிலைமையால். ஆராயிற் பொருள்களும் அவாய்நிலையனவல்ல; அவாய்நிலை இச்சைவடிவாற் சேதந தருமமாதலின். அதொக்கும். பொருள்கள் தம்பதங்கள் கேட்பானுக்கொன்றற்கொன்று விடையமான அவாய் நிலையைத் தோற்றுவித்தலின் அவாய்நிலையனவெனக் கூறப்படும். அதன்வழியால் அதனைச் கூறும்பதங்களும் அவாய் நிலையனவென உபசரிக்கப்படும். பதங்களே பொருளைக் கூறிக்கொண்டு பொருள் வேறுபாட்டிவிடைய அவாய்நிலையைத் தோற்றுவிப்பனவென்னும் உபசாரத்தால் அவாய்நிலையனவென்றுமாம். இங்ஙனம் பொருள்களும் அவாய்நிலையன; ஒன்றற்கொன்று கூட்டத்தகுதியனவுமாம். அதுவழியால் அப்பதங்களுந் தகுதியனவென்றுபசரிக்கப்படும். அண்மை பதங்களுக்கு ஒருவனுனே விரையக்கூறுதல். அதுவுந் தானே பதங்களினுண்டு; பொருள்வழியானன்று. ஆதலின் இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளுண்டாயிற்று. பொருள்கூறும்வழியாற் கேட்டபரனுக்குப் பதவேறுபாட்டுவிடைய அவாய்நிலையையாயினும் பொருள் வேறுபாட்டுவிடைய அவாய்நிலையையாயினுந் தோற்றுவிக்கின்ற, விளங்கும் ஒன்றற்சொன்று கூட்டத்தகுதிப்பொருளைக் கூறுகின்ற பதங்களது கூட்டம் வாக்கியம்; பதமும் எழுத்துக்கூட்டம்;* ஈண்டுக்கூட்டம் ஒரு ஞானவிடையமாதல். இங்ஙனம் அநின் முறையுடைய வாக்கிய எழுத்துக்கட்கு விரையக்கெடுதல் உண்மையின் ஒருங்கே பலவெழுத்தநுபவ முண்டாகாமையின் முதலெழுத்துக்களை அநுபவித்தெழுத்துக்கேட்குங்கால் முதன்முதலெழுத்தநுபவத்தாற் பிறந்த வாசனையோடுகூடிய ஈற்றெழுத்தோடுபொருந்திய பதத்திற்கமைந்த பொருட்சங்கேதங்கவர்தலால் அளிக்கப்பட்ட செவிப்புலனால் ஒருங்கே சதசத்தான பலவெழுத்தை அகப்படுக்கும்பதவுணர்வு தோன்றுந் துணைவலியால் புறத்தபிஞானம்போலப் புறத்தபிஞானக்காட்சியில் அதிதமாயுமுன்னரவத்தை தோன்றுமே. அன்றே பின்னர் முதன்முதற் பதாநுபவத்தாற் றோன்றிய வாசனையோடு கூடிய பதப்பொருள் ஞானத்தால் அளிக்கப்பட்ட ஈற்றுப்பதவிடையச் செவிப்புலனாற் பதத்தை அகப்படுக்கும் வாக்கிய ஞானமுண்டாம். இவ்வாக்கியம் ஆத்தமகனாற் கூறப்பட்டு உரைப்பிரமாணமாம். அதற்குப்

* பதம் "எழுத்துக்கூட்டம்" என்றுரேனும் சிறுபான்மை ஒரெழுத்தே பதமாதலு முண்டென்றறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலம் வாக்கியப்பொருளுணர்வு. இவ்வுரைப்
பிரமாணவிலக்கணம் உலகினும் வேதத்தினும்
பொது. உலகத்தின் இதுவிசேடம். யாவனாயினு
ம் ஒருவனாத்தனாவான். அனைவருமல்ல. ஆதலி
ன் உலகவாக்கியஞ் சிறிதே பிரமாணம். ஆத்த
னைக்கருத்தாவாகவுடைய வேதத்திற் பரமார்த்த
ஞான சிமகேசனாற் கூறப்பட்ட வாக்கியமெல்
லாம் பிரமாணம். எல்லாம் ஆத்தவாக்கியமாத
லின்.

நான்கு பிரமாணமும் வர்ணிக்கப்பட்டன.
இவற்றின் வேறான பிரமாணமல்ல, பிரமாண
மாயினும் ஈண்டேயடங்குதலின்.

## அருத்தாபத்தி.

அற்றாயின் அருத்தாபத்தியும் வேறுபிரமாண
மாகவுண்டு. அங்ஙனமன்றோ, பரியனான சா
த்தன் பகலுண்ணானென்று கண்டாயினும் கே
ட்டாயினும் இரவுண்டல் கற்பிக்கப்படும். ப
கலுண்ணானது பருமை இரவுண்டலன்றிக் கூ
டாது. ஆதலின் பருமை வேறொன்றலாகா
மை தோற்றுவித்த அருத்தாபத்தியே இரவுண்ட
லிற் பிரமாணம். காட்சி முதலியவற்றின் வே
று; இரவுண்டல் காட்சி முதலியவற்றிற்கு வி
டயமாகாமையின். இங்ஙனமன்று; இரவுண்ட
ல் அநுமான விடையமாதலின். அங்ஙனமன்
றோ, சாத்தன் இரவிலுண்பன்; பகலுண்ணானா
யினும் பரியனாதலின். யாவனொருவன் இரவி
லுண்ணான் அவன் பகலுண்ணானாயும் பரியனா
கான். எங்ஙன்? பகலிரவிலுண்ணான் பரியனா
கான். இவன் அங்ஙனமல்லன். ஆதலின் அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தாற் கவரப்படா. எங்ஙனம்? உருவாதிக ள் திக்குக் கால மனங்களுக்குக் குணங்களல்ல; விசேட குணமாதலில். யாவை சங்கியை மு தலிய, திக்காதி குணங்கள், அவை விசேட கு ணமல்ல; அவை யெல்லாப் பொருள்கட்கும் பொதுவே. புத்தியாதிகள் விசேட குணங்க ள்; குணமாய்க்கொண்டேயிந்திரியத்தாற் கவ ரப்படுதலின். உருவம் போல. ஆதலிற்றிக்கா திகள் குணங்களல்ல. ஆதலின் இவ்வெண்பொ ருளினின்றும் வேறாய்ப் புத்தியாதிகட்குக் கு ணி வேண்டத் தக்கது. அதுவேயான்மா. பிர யோகமும் புத்தியாதிகள். பிருதிவியாதியெண் பொருளின் வேறாய பொருளைப் பற்றுவது, பி ருதிவியாதியெண் பொருளைப் பற்றுமல் குணம ன்று. எங்ஙனம்? உருவாதி. கேவலவியதி ரேகி. அந்துவயவியதிரேகியானும் விளக்குப. எங்ஙனம்? புத்தியாதிகள் பிரிதிவியாதியெண் பொருளின் வேறான பொருளைப்பற்றுவன; பி ரிதிவியாதிகளைப் பற்றுமற் குணமாதலின். யா து எதைப்பற்றுமற் குணம், அது அதின் வே றாயதைப் பற்றுவதாம். எங்ஙனம்? பிரிதிவி யைப் பற்று ஒலி பிருதிவிக்கு வேறானவானை ப் பற்றியதென்று. ஆதலின், இங்ஙனம், பிரு திவியாதியெண்பொருளின் வேறுயொன்பதா ம் பொருளான ஆன்மாச் சித்திக்கும். அவ னும் யாண்டுங் காரியந் தோன்றுதலின், விபு. பரம மகத் பரிமாணவானென்று பொருள். வி புத்துவத்தால் அவற்கு நித்திய அநுமானம். வி யோமம் போல. சுகம் முதலிய வேறுபாட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல் உடம்புதோறும் வேறுபாடுடையான். அவனுக்குப் போகநிலம் உடம்பு. இன்பத் துன்பம் அநுபவம்.*

## உடம்பு.

போகமது எதனோடுகூடிய ஆன்மாவிற்றோன்றும் அதுபோகநிலம்; அதுவே உடம்பு. உடம்பு சேட்டைக்கிடமாயினும், உடம்புச் சேட்டை இதம் அகிதம் அடைத்த பரிகரித்தற்பொருட்டுப் புடைபெயர்தல். புடைபெயர்தன்மாத்திரை அன்று.

## இந்திரியம்.

உடம்போடிசையுத்தமாய ஞாநகரணமான தீந்திரியம் இந்திரியம். “தீந்திரியம் இந்திரியம்” என்று கூறிற் கலாதியினும் இந்தியத்துவம் வரல்வேண்டும். ஆதலில் “ஞாநகரணமான” என்று கூறப்பட்டது. அங்ஙனமாயினும், பொருள் இந்திரியக்கூட்ட முதலியவற்றினும் இந்தியத்துவம் வரல்வேண்டும். ஆதலின் “உடம்போடிசையுத்தமாய” என்று கூறப்பட்டது. “உடம்போடிசையுத்தமாய ஞாநகரணமே” என்று கூறில், ஆலோகத்தினும் இந்தியத்துவம் வரல்வேண்டும். ஆதலில் “தீந்திரியம்” என்று கூறப்பட்டது.

அவ்விந்திரியங்களும் ஆறு; ஆக்கிராணம், இரசநம், சட்சு, துவக்கு, சுரோத்திரம், மநம்,

* ஆன்மா, அநாதிநித்தியன் அன்று, கடவுளாற் சிருட்டிக்கப்பட்டானாதலின். விபுத்துவமுடையதுமன்று. விபுத்துவ மிருத்தியத்தை அநுமிப்பதுங் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவே. அவற்றுள், கந்தந் தோன்றுதற் சாதனஇந்திரியம் ஆக்கிராணம்; மூக்கு நுனியின் இருப்பது. அதுவும் பிருதுவிமயம். கந்தம்உடைமையும் கந்தம் கவர்வதால். இரசத்தோற்ற சாதனஇந்திரியம் இரசநம்; நாநுனி இருப்பது; அதுவும் அப்புமயம். ரூபாதி ஐந்தினுள் இரதத்துக்கே அபிவியஞ்சகமாதலில்; வாய்நீர் போல. ரூபத்தோற்ற சாதனஇந்திரியஞ் சட்சு; கண்மணிநுனியினிருப்பது; அதுவுந் தேயுமயம். ரூபாதி ஐந்தினுள் ரூபத்திற்கே யபிவியஞ்சகமாதலில்; விளக்குப்போல; பரிசத்தோற்ற சாதனஇந்திரியந் துவக்கு; உடம்பெலாம் வியாபி; அது வாயுமயம். ரூபாதி ஐந்தினுள் பரிசத்திற்கே யபிவியஞ்சகமாதலின். சிவிறிக்காற்றுப்போல. சத்தத்தோற்ற சாதனஇந்திரியஞ் சோத்திரம். அது செவியோடுகூடிய ஆகாயமே. வேறு பொருளன்று. சத்த குணத்துவத்தால்; அதுவுஞ் சத்தங் கவர்தலின். எவ்விந்திரியம் ரூபாதி ஐந்தினுள் எக்குணத்தைக் கவர்வது, அது அக்குணத்தோடு கூடியது. எங்ஙனம்? சட்சு, ரூபங் கவர்வது; ரூபகுணமுடையது. சத்தங் கவர்வது சுரோத்திரமாதலின், அது சத்தகுணமுடையது. அகவிந்திரியம், மநம். இன்பாதி ஞாநங்கள், காரணசாத்தியங்கள்; கிரியையாதலின்; துணித்தற் கிரியை போல.

## அருத்தம்.

அருத்தங்கள் ஆறு பதார்த்தங்கள்; அவை தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவியம், குணம், கருமம், சமாநியம், விசேடம், சமவாயம் என்பனவே.

பிரமாணம் முதலியன ஈண்டே அடங்குவனவாயினும் பயன்படல் வசத்தால் பேதமாகக் கூறப்படும்.

### திரவியம்.

சமவாயிகாரணம் திரவியம்.

அத் திரவியங்களும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மநம், ஒன்பதே.

### பிருதிவி.

அவற்றுள் பிருதிவித்துவசாமாநியம் உடையது பிருதிவி. வன்மை, மென்மை முதலிய அவயவ சையோக விசேடத்தோடு கூடியது; ஆக்கிராணம், இந்திரியம்; உடம்பு, மட்பிண்டம், கல் முதலிய உருவமுடையது. கந்தம், இரதம், ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், கூடல், பிரிதல், அண்மை, சேய்மை, குருத்துவம், நைமித்திகத்தளர்ச்சி, சம்ஸ்காரமுடையது. அதுவும் நித்த அநித்தபேதத்தால் இருவகை; பரமாணுரூபம் நித்தியம். காரியரூபம், அநித்தியம். பிருதிவியினுடைய ரூபரசகந்தபரிசங்கள், நித்தியங்கள். பாகத்தாற்றோன்றியன அநித்தியம்; பாகந் தேயு சையோகமாதலின். பிருதிவியினது முன்னர்ரூப முதலியன கெடும் மற்றையன பிறக்குமென்பது பாகத்தாற்றோன்றுவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பு.

அப்புத்தன்மைச் சாமானியமோடு கூடிய தப்பு. இரசகம் இந்திரியம். ஆறு, கடல், பனி, ஆலி, முதலிய உருவமுடையது. கந்தமின்றிச் சிநேகமோடுகூடிய முன்சொன்ன குணமுடையது. நித்த அநித்தமுமாம். நித்தம் பரமாணுரூபம். அநித்தங் காரியரூபம்.

## தேயு.

தேயுத்தன்மைச்சாதியுடையது தேயு. சட்சு, இந்திரியம்; ஞாயிறு, பொன், தீ முதலிய வேறுபாடுடையது. ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், வியாகம், சேய்மை, அண்மை, நைமித்திகத்தளர்ச்சி, சம்ஸ்காரமுடையது. நித்த அநித்தமும், முன்போல. அது உற்பூதரூப பரிசம், அநற்பூதரூப பரிசம், அநற்பூதரூப உற்பூத பரிசம், உற்பூதரூப அநற்பூதபரிசமென்று நால்வகை.

உற்பூதரூப பரிசம் எங்ஙனம்? பிண்டத்தேயுவான தீமுதலியன போல்வ உற்பூத அபிபூதரூப பரிசம். அநற்பூதரூபமென்னில் கட்புலப்படாமை வேண்டும். அநற்பூதபரிசமென்னிற் பரிசத்தாற் கவரப்படாமை வேண்டும். அபிபவம் வலியதாகிய தன் சாதியான பிரிதிவி சம்பந்தப் பரிசத்தாற் பணைப்பதுமே. அநற்பூத ரூபபரிசத்தேயு எங்ஙனம்? சட்சு இந்திரியம். அநற்பூதரூப உற்பூத பரிசம் எங்ஙனம்? வெந்நீர்த் தேயு. உற்பூதரூப அநற்பூதபரிசம் எங்ஙனம்? விளக்கினொளிமண்டலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாயு.

வாயுத்துவமுடையது வாயு. துவக்கிந்திரியம். பிராணன் காற்று முதலிய பேதமுடையது. பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், விபாகம், சேய்மை, அண்மை விரைவுடையது. அதுவும் பரிசத்தால் அநுமேயம். அங்ஙனமன்றே, வாயு வீசுகையில் வெம்மை தண்மையில் பரிசம் யாதொன்று தோன்றுகின்றது அது குணம். ஆதலிற் குணியை விட்டறியப்பட்டதாய்க் குணியை அநுமாபிக்கும். குணியும் வாயுவே; பிரிதிவி தோன்றுமையின். பிரிதிவி வாயுவல்ல; அதற்கு வெம்மை தண்மையில் பரிசமின்மையின். அதுவும் நித்த அநித்த பேதத்தால் இருவகை. நித்தியம் பரமாணுரூபவாயு; அநித்தியங் காரியரூபவாயு.*

### தோற்றமும் அழிவும்.

அவற்றுட் காரியமான பிரிதிவியாதி நான்கிற்குந் தோற்றக்கேடு முறையே கூறுதும். இர

* பிரிதிவியாதிய திரவியங்களுள் நான்கும் நித்தியமென்று பரமாணுக்களிலே பிடிகையிடும் வைதாகிகியர், மண்ணின்றிக் குடம்வனையுஞ் சத்தி, குலாலனுக்கின்றேயென்னும் நரிருத்திய முறை கண்டு, அம்முறைமையைச் சர்வசாமார்த்தியகடவுளிலும் ஆவாகித்தார்போலும்.

கடவுள், குசிவேர பாதாசமாய், சிருட்டிசெய்ய வல்லவரேயெனின், பரமாணு நித்தியஞ் சாதிக்கவேண்டியதில்லை.

உலகின்கண்ணே எப்பொருள்களும் உபகாரகருவிகளாய் விளக்கொண்டலால், காரியரூபமாகிய பிரிதிவியாதியவற்றின் அமைக்கப்பட்ட உபகாரரணத்தின் சுருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டு பரமாணுக்களது வினையாற் சையோகமுண்டாகையிற் றுவியணுகந் தோன்றும். அதற்குப் பரமாணுக்கள் சமவாயிகாரணம். அவற்றது சையோகம் அசமவாயிகாரணம்; அதிட்டாதி நிமித்தகாரணம். துவியணுகங்களது வினையாற் சையோகமுண்டாகையிற் றிரியணுகந் தோன்றும். அதற்குத் துவியணுகங்கள் சமவாயிகாரணம். ஒழிந்தன முன்போல. இங்ஙனந் திரியணுகங்களாற் றூலதமம். இங்ஙனமுறையால் மகாப் பிருதிவி, மகா அப்பு, மகா தேயு, மகா வாயுத் தோன்றும். காரியத்தையடைந்த ரூபாதிகள் தங்கட்கிடமான சமவாயிகாரணத்தை அடைந்த ரூபாதிகளாற் றோன்றும்; காரணகுணங்கள் காரிய குணங்களைத் தோற்றுவிக்குமென்னும் நியாயத்தால். இங்ஙனந் தோன்றிய ரூப முதலியவற்றினுடைய காரியத்திரவியமாகிய குடமுதலியவற்றிற்கு அ

---

காரணரூபமாகிய பரமாணுப்பிரிதிவியாதியவற்றின் அமைக்கவென்றுகொள்ளவேண்டும். ஆகவின் சங்கற்பரூபமாகிய பரமாணு சங்கற்பிக்கும் ஒரு கருத்தாவை உடைத்தாகவேண்டும். அச்சங்கற்பகர்த்தா, சங்கற்பவிடயத்தின் முன் உளராகவேண்டும். ஆதலால் பரமாணு அநாதி நித்தியம் என்பது யுக்தி விரோதமென்றறிக.

பரமாணுவிடத்துச் சங்கற்பசத்திகள் இல்லை, சர்வசாமர்த்திய கர்த்தாவே வருவித்தாரென்னின், பரமாணுவின் இல்லாத சங்கற்ப சத்தியை உபாதானமின்றிச் சமைத்த சாமர்த்தியம் பரமாணுவையும் எளிதிற் சமைக்குமன்றே, அப்பேறற் பரமாணு நித்தியமென்று வயிறுக்கவேரேன் என்றுப்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையவமான கபாலாதியிற் றன்னுதலாலாயினும், புடைத்தலாலாயினும் வினைதோன்றும். அதனால் விபாகம். அதனால் அவையவவிவையத் தோற்றுவிப்பதான அசமவாயிகாரணமான சையோகத்திற்கு விநாசம்பண்ணப்படும். பின்னர்க்காரியத்திரவியமான அவையவியான குட முதலியவற்றிற்கு நாசம். அசமவாயிகாரணநாசத்தாற் திரவியநாசங் காட்டப்பட்டது. ஓரிடத்துச் சமவாயிகாரணநாசத்தாற் திரவியநாசம். எங்ஙனம்? முற்கூறிய பிருதிவியாதிகளுக்குச் சங்காரத்தாற் சங்கரிக்கவேண்டி மகேசனுடைய சங்கரித்தல் வேட்கையால், அணுக்களில் வினை, அதனால் விபாகம், விபாகத்தாற் சையோகநாசம். துவியணுகங் கெடுகையில் ஆசிரயக்கேட்டாற் திரியணுகாதி நாசமுறையே. பிருதிவியாதி நாசமெங்ஙனம்? நூற்கேட்டின் ஆடை கெட்டு அதனையடைந்த ரூபாதிகளுக்குந் தத்தம் ஆசிரயக்கேட்டானே கேடு. வேறாயின் ஆசிரயமிருக்கையிலே மாறுபட்ட குணமடைதலாற் கேடு. எங்ஙனம்? பாகத்தாற் குட முதலியன ரூபாதிநாசமென்க.

பரமாணு உண்மையிற் பிரமாணம் யாது? கூறுதும். சாளரவெயிற்கண்ணதாகிய எல்லாவற்றினு நுண்ணியதியாதொன்றாம், அது தன்னுண்ணியதாகிய பரிமாணத்திரவியத்தாற்றோன்றியது. காரியத்திரவியம் ஆதலிற் குடம்போல. அத்திரவியமுங் காரியமே. பெருந்திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவநியமத்தால். ஆதலின் இங்ஙனந் துவியணுகமெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றும் வேறு திரவியஞ் சித்தம். அதுவுஞ் சம
வாயிகாரணத் திரவியத்தாற்றோன்றும். காரி
யத்திரவியமாதலிற் குடம்போல. யாது துவிய
ணுகத்தைத் தோற்றுவிப்பததுவே பரமாணு. அ
துவுந் தோன்றாததே. அற்றாயின், காரியத்திர
வியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவநி
யமமாதலின் அது தோன்றாததென்னனம்? கூ
றுதும். எண்ணிறந்த காரிய பரம்பரைக்குற்ற
ம் வருதலின். இங்ஙனமாயிற், பல திரவியத்
தாற் பிறத்தல் விசேடமின்மையின். மேருகடு
குகட்குத் துல்லியபரிமாணத்துவம் வருதலின்,
ஆதலிற் றோன்றாததே பரமாணு. துவியணுகம்
இரண்டு பரமாணுக்களாலே தோன்றும். ஒன்
றற்குத் தோற்றுவியாமை நியமமாதலின் மூன்
று முதலிய விகற்பனையிற் பிரமாணமின்மையி
ன். திரியணுகம் மூன்று துவியணுகங்களாலே
பிறக்கும். ஒன்றற்குத் தோற்றுவியாமை நியம
மாதலின், இரண்டாற்றோன்றிற் காரியத்தைய
டைந்த மகத்துவந்தோன்றாமையின். நான்கு
முதலிய கற்பனையிற் பிரமாணமின்மையின்.
மூன்றனோ மகத்துவந் தோன்றுதல் கூடுதலின்.

### ஆகாயம்.

ஆகாயத்துவகுணமுடையது ஆகாயம். சத்
தம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோ
கம், விபாகமுடையது. விபு, நித்தியம், சத்த
லிங்கமுடையது. அதற்குச் சத்தலிங்கம் என்
னனம்? பாரிசேடத்தால்; அங்ஙனமன்றே, ச
த்தகுணஞ், சாமானியமுடையதாய் நம்மனோர்
புறவிந்திரியமொன்றாற் கவரப்படுதலின்; ரூப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்போல. குணமுங் குணியைப்பற்றியதே. அ
தற்குப் பிரிதிவியாதி நான்கும் ஆன்மாவுங்
குணியாகா. சத்தஞ் செவியாற் கவரப்படுத
லின். யாவை, பிரிதிவியாதி குணங்கள், அ
வை சுரோத்திரேந்திரியத்தாற் கவர்வ அல்ல? அ
ங்ஙனம், எங்ஙனம்? ரூபாதிகள். சத்தஞ் சுரோத்
திரேந்திரியத்தாற் கவரப்படும். திக்குக்காலமன
ங்களது குணமன்று; விசேடகுணமாதலின்.
ஆகலின் எட்டினின்றும் வேறாகச் சத்தத்திற் கு
ணக்குணியதுமிக்கப்படும். அதுவே ஆகாயம்.
அதுவும் என் பேதத்திற் பிரமாணமின்மையின்.
ஒருமையாற் கூடுதலின். ஒருமையாதலின். ஆ
காயத்துவமென்னுஞ் சாமானியம் ஆகாயத்திலில்
லை; சாமானியம் பலவிடத்திருத்தலின். ஆகா
யம் விபு; பரமமகற்பரிமாணமுடையதென்று
பொருள். எல்லாவிடத்துங் காரியந் தோன்று
தலின் விபு. விபுத்துவத்தாணித்தியம்.*

* சத்தகுணத்தினால் தார்க்கிகர் ஆகாயதிரவியஞ் சா
திப்பர். இது மீமாஞ்சையாருரைப்பர். பூமியின் எவ்விடத்து
ஞ் செறிந்திருக்கின்ற வாயுவே சத்தத்தின் உபகாரமாகி
யதாம். சத்தம் உற்பத்தியான இடத்தே அதனிடத்த
ருகமைந்த வாயுவின் அலைக்கிளர்ச்சிப்ப, அவை தம்ம
ரால் அலைக்கிளர்ச்சிப்ப, இவ்வாறே கேட்பவனது செ
வித்துளையின் அயல்வாயுவின் கூறுகள் சலிக்கப்பட அச்
சலனமே காரணமாகச் சத்தம் அறியப்படுகின்றது. இக்
கையறியாதார் ஆகாயப்பூ என்பார்போல, ஆகாயமே சத்
தத்தின் உபகாரகருவியென்பர். வாயுகாரியத்திரத்தின்
கண்ணே வாயுவையகற்றியபோது அங்கண் அசைக்கப்
படும் மணியினின்று சத்தம் பிறவாமை. இதற்குச் சான்
றாதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலம்.

காலம் திக்கின் வேறான பரத்துவாபரத்துவத்தால் அநுமேயம். சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், விபாகமுடையது ; ஒன்று ; நித்தியம் ; விபு ; அதற்றுத் திக்கின் வேறான பரத்துவாபரத்துவத்தால் அநுமேயத்துவம் எங்ஙனம்? கூறுதும். அணியனாய் அண்மையால் பரத்துவத்திற் கருகனான முதியோன்கண் வேறான பரத்துவந் தோன்றும். சேயனாய்ச்சேய்மையாற் பரத்துவத்திற்சருகனான இளையோன்கண் வேறான பரத்துவந் தோன்றும். இதில் திக்கின்வேறான பரத்துவமும் அபரத்துவமும் காரியமாய்த் திக்கு முதலிய காரணமுண்டாகாமையிற் காலமே காரணமென்றநுமிக்கப்படும். அது ஒன்றாயினும் நிகழ்விறப்பெதிர்வு வினையுபாதி வசத்தான் நிகழ்வு முதலிய வழக்கத்தையடையும். புருடனைப்போல ; அவற்கு அடுதன் முதலிய வினையுபாதிவசத்தான் மடையன் முதலிய பெயரடையும். இதற்கு நித்திய விபுத்துவங்கள் முன்போல.

## திக்கு.

திக்கு ஒன்று ; நித்தியம் ; விபு ; சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், விபாகமு

---

பிருதிவியப்புக்களும் இருபான்மை சத்தவாயினிகளாதலின, பாரிசேடத்தால் ஆகாயத்திற்குத் திரவியத்வ லாக்கூறப்புகுந்த சமக ஆசிரியர் தருக்க ஆராய்ச்சியின்றி யானவை பிருதிவியாதி குணங்கள் ஆனவை சுரோத்திரேந்திரியத்தாற் கவர்வ அல்ல என்னும் உதாரணவாக்கியத்திலே பிழைகவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையது. அதுவும், கிழக்கு முதலிய ஞானங்களான் அநுமேயம். அவற்றிற்கு வேறுநிமித்தமின்மையின். கிழக்கினும் மேற்கினும் பொருளாண்டேயிருத்தலின். அது ஒன்றாயினும், தன் தன் சையோகவுபாதி வசத்தாற் கிழக்கு முதலிய பெயர்களை அடையும்.*

ஆன்மா.

ஆன்மத்துவமுடையது ஆன்மா. இன்ப முதலிய வேறுபாட்டாற் பலவே. அதுவும் கூறினும். அதற்குக் குணங்கள், சங்கியை முதலிய ஐந்தும் புத்தி முதலிய ஒன்பதும். அதற்கு நித்தியத்துவ விபுத்துவங்கள் முன்போல. அநுசையோகி.

மனம்.

அகவிந்திரியம் மனம். இன்ப முதலிய ஞானத்துக்குக் காரணம். சங்கியை முதலிய எண்குணமுடையது. புறவிந்திரியப்புணர்ச்சியாற் பு

* காலந் திக்கு என்பன திரவியங்கள் அன்று. உலகமென்று எல்லாற்கொள்ளப்படுவதில், வஸ்து யாதொன்றும் இல்லதேசல், உள்ளதுதிக்கே. அது பொருள்களிருக்குமிடம்.

ஒரு திரவியத்தாற் சுதவப்பட்ட இடத்தை அக்கணத்தே அதுவும் அங்குளதாக மற்றொரு திரவியஞ் சுதவுதல் எளாது. இவ்வேலாமை திரவியலக்கணம். திக்கிடத்தே, பிரிதிவியாதி திரவியங்கள் கிடக்கின்றன. ஆதலால் திக்குந்திரவியம் அன்றென்றுகொள்க.

திரவியத்தினது உள்ளமைநிகழ்ச்சிகிடனாதியவற்றைக் குறித்துக் காலங் கூறப்படுமேயன்றிக் காலம் என்றொரு திரவியம் உளதன்றென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றப்பொருள் கவர்வது. அதனாலே எல்லா ஞாநத்திற்குஞ் சாதகம். அதுவும் காட்சியன்று. மற்றென்னெனின் அநுமானத்தாற்றோன்றுமது. அங்ஙனமன்றேல், இன்ப முதலிய ஞாநங்கள் கட்புலமுதலிய அல்லாக்கரணத்தாற் சாதிப்பன. கட்புலமுதலிய அன்றியுந் தோன்றலின். ஆதலின் இன்ப முதலிய ஞாநங்கள் அடையுமிடத்து யாது கரணம் அது மநம். அது அநுபரிமாணம். திரவியங்கள் கூறினும்; குணங்கள் கூறாதும்.*

## குணம்.

சாமாநியமுடையது, சமவாயிகாரணமல்லது, வினை அல்லது, குணம். அதுவும் பொருளைப் பற்றியது. ரூபம், ரசம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, புண்ணியம், பாவம், வாசனை, என்னும் பேதத்தால் இருபத்துநான்கு குணமாம்.

## உருவம்.

கட்புலமாத்திரையாற் கவர்வது ரூபம்; விசேடகுணம். பிருதிவி முதலிய மூன்றன்கண் இருப்பது. அதுவும் வெண்மை முதலிய பல வேறுபாடு. பிருதிவியிற் பாகசரூபம். தேயு

* மநம் திரவியமன்று, ஆன்மாவே தொழின்முறை நோக்கி "மநம்" எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற் பாகசவெண்மையொளி. அப்புவில் ஒளியில்லாத அபாகசவெண்மை.

இரசம்.

இரசம் இரசனத்தாற் கவரப்படுவது; விசேடகுணம்; பிருதிவிபுனல்களிலிருப்பது. அவற்றுள் பிருதிவியின் மதுர முதலிய அறுவகைப் பாகசமும், அப்புவின் மதுரமய பாகசமும் நித்தியா நித்தியமாம். நித்தியம்—பரமாணுவான அப்புவில்; அநித்தியம் காரியமான அப்புவில் என்க.

கந்தம்.

கந்தம் ஆக்கிராணத்தாற் கவருங் குணம்; பிருதிவி மாத்திரையின் இருப்பது. அது சுநாற்றந் தீநாற்றமென்றிருவகை. புனன் முதலியவற்றிற் கந்தந் தோன்றல் சையுத்த சமவாயத்தால் என்றறியத்தக்கது.

பரிசம்.

பரிசம் துவக்கிந்திரியத்தாற் கவரப்படுவது; விசேடகுணம். பிருதிவியாதி நான்கின் மாத்திரமிருப்பது; அது தண்மை, வெம்மை, தண்மை வெம்மையில்லது, என்னும் பரிசபேதத்தால் மூவகை. தண்மை நீரில்; வெம்மை தீயில்; தண்மை வெம்மையில்லது பிருதிவிவாயுக்களில். இவ்வுருவாதிநான்கும் மகத்துவத்தோடொருபொருளிற் சமவேதித்துக்கொண் டிருந்தங்களாயே காட்சிகள்

சங்கியை.

சங்கியை ஒருமை முதலிய வழக்கின் காரணம்; சாமானிய குணம், ஒன்று முதற் பரார்த்தமள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும். அவற்றுள் ஒருமை இருவகை; நித்த அநித்த
தபேதத்தால். நித்தியத்தையடைந்தது நித்திய
ம். காரியத்தையடைந்த தநித்தியம். தனதா
சிரைய சமவாயிகாரணத்தை அடைந்தவொரு
மையாற் றோன்றுவது இருமை அநித்தியமே.
அதுவும் இரண்டு பிண்டங்களில் இஃதொன்றி
ஃதொன்றென்னும் அவாவுதற்கருத்தாற்றோன்
றும். அவற்றுட் பிண்டங்கள் சமவாயிகாரண
ம். பிண்டங்களில் ஒருமைகள் அசமவாயிகா
ரணம். அவாவுதற்கருத்து நிமித்தகாரணம். அ
வாவுதற்கருத்து நாசத்தானே இருமை நாசம்.
இங்ஙனம் மும்மை முதலிய தோற்றம்.

## பரிமாணம்.

பரிமாணம் அளவுவழக்கின் காரணம். அது
அணு, மகத்து, நெடில், குறில் என நான்குவ
கை. அதுவும் நித்த அநித்த பேதத்தால் இருவ
கை. நித்தியத்தை அடைந்தது நித்தியம். காரி
யத்தையடைந்த தநித்தியம். காரியத்தையடை
ந்த பரிமாணங் காரணத்தையடைந்த சங்கை
யோகி, பரிமாணயோகி, பிரசயயோகி; அவை
எங்ஙனம்? துவியணுகபரிமாணம் இறையவா
வுதற்கருத்தாற் றோன்றியது. பரமாணு இரு
மைச்சங்கையோகி. சங்கை காரணமென்று
பொருள். திரியணுகபரிமாணமும் தனதாசி
ரைய சமவாயிகாரணத்தை அடைந்த பன்மை
ச்சங்கையோகி. சதுரணுகாதிபரிமாணம் தன
தாசிரைய சமவாயிகாரண பரிமாணத்தாற்
றோன்றியது. பஞ்சித்திரட்சி பரிமாணம் தன
தாசிரைய சமவாயிகாரண அவையவங்களது ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்னுதற் சையோகத்தாற் றோன்றியது. பரமாணுபரிமாணமும் ஆகாயாதியை அடைந்த பாரிமாண்டல்யமென்னும் பரமமகற் பரிமாணமும் நித்தியமே.

வேறுதல்.

வேறுதல் வேறென்னும் வழக்கின் காரணம்.

சையோகம்.

சையோகஞ் சையுற்றவழக்கினேது. இரண்டன் கண்ணது; அவ்வியாப்பியவிருத்தியது. அது வேறுவினையாற்றோன்றியது, இரண்டன் வினையாற்றோன்றியது, சையோகத்தாற்றோன்றியதென மூவகை. அவற்றுள் வேறுவினையாற்றோன்றுவதெங்ஙனம்? வினையுடைய பருந்தோடு வினையில் குற்றிக்குச் சையோகம். அதற்குப் பருந்தின் வினை அசமவாயிகாரணம். இரண்டன் வினையாற் றோன்றுவதெங்ஙனம்? வினையுடையமல்லரது சையோகம். சையோகத்தாற் றோன்றுவதெங்ஙனம்? காரண அகாரண சையோகத்தாற் காரிய அகாரிய சையோகம் எங்ஙனம்? கைத்தருசையோகத்தான் மெய்த்தருசையோகம்.

விபாகம்.

விபாகம் பிரிவின் வழக்கினேது. சையோகமுற்றவிரண்டன் கண்ணிருப்பது. அது வேறு வினையாற்றோன்றியது, இரண்டன் வினையாற்றோன்றியது, விபாகத்தாற்றோன்றியதென மூவகை. அவற்றுள் முதல தெங்ஙன்? பருந்தின் வினையாற் பருந்தொடுவிபாகம். இரண்டாவதெங்ஙன்? தகர்களது விபாகம். மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதெங்ஙன? கைத்தருவியாகத்தான் மெய்த்தரு விபாகம்.

### பரத்துவம், அபரத்துவம்.

பரத்துவாபரத்துவங்கள், பர அபரவழக்கின் காரணங்கள். அவை இருவகைய; திக்கான்வந்தவுங் காலத்தான்வந்தவும். அவற்றுள் திக்கான்வந்தவற்றது தோற்றங் கூறுதும்.

ஒரு திசையிலிருக்கும் பிண்டங்களில், அஃததனின் அணித்தென்னுங் கருத்தால் அளிக்கப்பட்ட திக்குப்பிண்டசையோகத்தால் அபரத்துவம் அணியதன்கட்டோன்றும். சேய்மைக்கருத்தாற் பரத்துவஞ் சேயதன்கட்டோன்றும். பிண்டத்தினுடைய அண்மை காண்பவனுடம்பவதியால்.

காலத்தான்வந்த பரத்துவாபரத்துவங்களது தோற்றங் கூறுதும். நியமமல்லாத திக்கின் இருக்கின்ற இளையோன் மூத்தோனுடைய பிண்டங்களில் இவன் அவனின் அற்பகாலமுடையன் என்னும் இவ்வகை அவாவுதற்கருத்தால் அளிக்கப்பட்ட காலபிண்டங்களினுடையசையோகத்தால் இளையோன்கண் அபரத்துவந்தோன்றும். இவன் அவனின் மிகுந்த காலமுடையன் என்னுங் கருத்தான், மூத்தோன்கட்பரத்துவந்தோன்றும்.

### குருத்துவம்.

குருத்துவம் முதல் வீழ்தலின் அசமவாயிகாரணம். பிருதிவி புனல்களினிருப்பது. சையோகம் வேகமுயற்சியின்றிக் குருத்துவத்தால் வீழ்தல் உளதென்று, கூறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவத்துவம்.

திரவத்துவம் முதல் ஒழுகுதலின் அசமவாயி காரணம்; நிலத்தேயு நீரினிருப்பது. திரவத்துவம் நிலந் தீயான நெய் பொன்களுக்குத் தீசையோகத்தாற் றிரவத்துவமாதலின், நிமித்திகத்திரத்துவம். நீரின் இயற்கைத் திரவத்துவம்.

சிநேகம்.

சிநேகந் திரட்டுதல். நீரில்மாத்திரமிருப்பது. காரணகுணமுதற்று. குருத்துவமுதலிய போலப் பொருளிறுந் துணையும் நிற்பது.

சத்தம்.

சத்தஞ் செவிப்புலனாற் கவர்வது; சதியுடையது. ஆகாய விசேடகுணம்.

அற்றாயின், அதற்குச் செவிப்புலனாற் கவரப்படுதல், எங்ஙனம்? யாண்டாயினு முரசு முதலிய இடத்திற் சத்தந் தோன்றும். செவிப்புலன் புருடனிடத்தே இருக்கும். அஃதொக்கும்; முரசிடத்தே தோன்றிய சத்தம் வீசி தரங்க நியாயத்தாற்றான், கதம்பமுகுள நியாயத்தாற்றான், தனக்கணித்தான சத்தந்தான் தோற்றுவிக்கும். அச்சத்தமுஞ் சத்தத்தாற் றோற்றுவிக்குமென்னு முறைமையாற் செவிப்புலத்திற் றோன்றிய இறுதிச்சத்தஞ் செவிப்புலனாற் கவரப்படும். முதலது நடுவதுமல்ல.

இங்ஙனம் வேய் பிளக்குங்கால் இருபிளவினீக்கத்திற் றோன்றிய சத்தஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்குமுறையானே செவிப்புலனிறுதிச் சத்தந் தோன்றும். அவ்விற்றிற் சத்தஞ் செவிப்புலனாற் கவரப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசொலியென்றுற் கேட்கப்பட்டது, என்னும் புத்தி சண்டுமயக்கமே. முரசொலி தோன்றுகையின் முரசாகாய சையோகம் அசமவாயி காரணம். முரசகுணிற் சையோகம் நிமித்தகாரணம். வேய்பிளத்தலாற் றேன்றிய சடசடவொலித்தோற்றத்தின் வேய்பிளவாகாய சையோகம் அசமவாயிகாரணம். இருபிளவினீக்கம் நிமித்தகாரணம். இங்ஙனமுதலொலி சையோகத்தாற் றேன்றியதும் விபாகத்தாற் றேன்றியதுமாம். முதலதொழிக்திடும் ஒலிகள் சத்தத்தை அசமவாயிகாரணமாகவுடையன. அநுகூலவாயு நிமித்தகாரணம். சையோகத்தால் விபாகத்தால் சத்தத்தாற் சத்தந் தோன்றுமென்று பிறருங் கூறினர். முதலது முதலான எல்லாச்சத்தங்களுக்கும் ஆகாயமே சமவாயிகாரணம். வினை புத்திபோல முக்கணவத்தையது. அவற்றுண் முதனடுவொலிகள் காரியசத்தத்தாற் கெடும். ஈற்றது ஈற்றயலால், சுந்தோபசுந்தநியாயத்தாற் கெடுமென்பது பொருந்தாது. முக்கணவவத்தையானவீற்றதுடைய இரண்டாங் கணத்திலிருப்பதான மூன்றுங்கணத்தில்லையான ஈற்றயலாவீற்றுக்கேடு தோன்றல்பொருந்தாமையின். ஆதலின் ஈற்றுன் ஈற்றயற்கேடு. ஈற்றுக்கேடு சத்தத்தின் கேடு. சத்தம் அநித்தியம். சாமாகியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதலின் குடம்போல. இதில் சத்தத்தினுடைய அநித்தியத்துவஞ் சாத்தியம். அநித்தியத்துவமும் விநாசத்தோடு கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொரூபத்துவம். விகாசத்தோடு கூடிய சத்தை பொருந்தாது. சத்தையில்லாத பிராகபாவத்தில் அநித்தியத்துவமின்மை வரல்வேண்டும். சாமாநியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதல் ஏது. இந்திரியத்தாற் கவரப்படுதலென்றுகூறில் ஆன்மாவின் வியபிசாரம் வருதலின் புறவிந்திரியமென்று கூறப்பட்டது. யோகி புறவிந்திரியத்தாற் கவர்வதான அதனோடு வியபிசாரம் வருதலின் அதைவிலக்கும்பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. யோகியுண்மையிற் பிரமாணம் யாது கூறுதும். பரமாணுக்களொருவற்குக் காட்சி; பிரமேயமாதலின். குடம்போல. யாவன் பரமாணுவைக் காண்பான் அவனே யோகி. அங்ஙனமாயினுஞ் சாமாநிகளோடு வியபிசாரம் வருதலின் சாமாநியமுடையதாய் என்று கூறப்பட்டது. சாமாநிய முதன்மூன்றுஞ் சாமாநியமுடையவல்ல.

புத்தி.

பொருள் விளக்கம் புத்தி.

சுகம்.

பிரீதிசுகம்; அது எல்லாராலும் அநுகூலமாக அறியத்தக்கது.

துக்கம்.

பீடை துக்கம். அது எல்லாராலும் பிரதிகூலமாக அறியத்தக்கது.

இராகம்.

இராகம் இச்சை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவேஷம்.

குரோதந் துவேஷம்.

பிரயத்திநம்.

ஊக்கம் பிரயத்திநம். புத்தியாதியானும் மாநதக்காட்சி.

தருமம், அதருமம்

தருமாதருமங்கள் சுகதுக்கங்களுக்கு அசாதாரண காரணங்கள். அவை காட்சியல்ல. அநுமிக்கப்படும். சாத்தனுடம்புமுதலிய சாத்தன் விசேடகுணத்தாற் றோன்றியன. காரியமாய்ச் சாத்தனுக்குப் போகவேதுவாதலின். அது சாத்தன் முயற்சியாற் பிறந்தபொருட்போலும்.

சம்ஸ்காரம்.

சம்ஸ்காரம், வேகம், பாவனை, திதித்தாபகமென மூவகை.

அவற்றுள், வேகம், பிரிதிவி முதனான்கினும் மனத்தினுமிருப்பது ; வினைக்கேது.

பாவனையென்னுஞ் சம்ஸ்காரம், ஆன்மாவின்மாத்திரையாயிருப்பது. அநுபவத்தாற் றோன்றியது. நினைவிற்கேது. அதுவும் எழுந்தே நினைவைத் தோற்றுவிக்கும். எழுதல் துணையுண்டாதல். சம்ஸ்காரிக்குத் துணைகள் ஒப்புமைகாண்டன் முதலியன.

திதித்தாபகம் பரிசம்போல விசேடித்திருப்பது. தனக்கிடமாய் வேறொரு வடிவான பாய் முதலியவற்றிற்கு, அந்நிலைமையை அடைவிப்பது. இப்புத்திமுதற்றருமம் ஈறானவையும் பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையும் ஆன்ம விசேடகுணம். குணங்கள்
கூறினும். கருமங் கூறுதும்.

## கருமம்.

புடைபெயர்ச்சி கருமம். குணங்கள் போல
த் திரவியமாத்திரத்திருப்பது. மூர்த்தத்துவ ப
ரியாய நாமமுடைய விபுவல்லாத பொருளின்
பரிமாணத்தோடு கூட ஒருபொருளிற் சமவே
தித்திருப்பது. விபாகவழியால் முதலிடத்திற்
சையோகநாசத்தில்; பின்னிடத்தின் சையோக
வேது. எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல்,
நடத்தலென்னுங் கூறுபாட்டால் ஐவகை. சுழ
றன் முதலியன நடத்தலுள் அடங்கும்.

## சாமானியம்.

அநுவிருத்தி ஞானவேது சாமானியம். திர
விய முதன் மூன்றினிருப்பது. நித்தியம்; ஏ
கம்; அநேகாநுகதம். அதுவும் பரமெனவும்,
அபரமெனவும் இருவகை. அவற்றுட் பரம் ச
த்தை; பலவிடையமாதலின். அதுவும் அநுவி
ருத்திமாத்திரமேதுவாதலிற் சாமானியமாத்திரம்.
அபரந் திரவியத்துவமுதலிய அற்பவிடைய
மாதலின். அதுவும் வியாவிருத்திகமேதுவாத
லின். சாமானிய விசேடம் இதில் ஒருவகை
கூறினும். பொருளின் வேறுன சாமானியமி
ல்லென்று, இதிற் கூறுதும். ஆயிற் பின்னமா
ய் வேறுபட்ட இலக்கணமுடைய பிண்டங்க
ளின் ஏகாகார புத்தி எல்லாவற்றினும் அடைத்
த யாதைப்பற்றி நிற்கும் அதுவே சாமானியமெ
ன்க. அற்றயின் தானல்ல நிச்சசத்தாற் பனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணப்பட்டதே ஏகாகாரபுத்தி. அங்ஙனமன்றோ வவ்வாவடிவினுத்தானல்ல நீக்கவிடையமே விதிரூபமானவர்த்தத் தன்மையோகியான சாமாகியவிடையமன்றேயெனின் இங்ஙனமன்று; விதிமுகத்தானே யேகாரங்கவர்தலின்.

## விசேடம்.

விசேடம் நித்தியத்திரவியத்திருப்பது. வியாவிருத்தி. புத்திமாத்திரத்திற்சேது. நித்தியத்திரவியங்கள் ஆகாயமுதலியவைந்து, பரமாணுரூபமான பிரிதிவியாதி நான்கு.

## சமவாயம்.

நீக்கமின்றிருப்பவற்றின் சம்பந்தம் சமவாயம். அது கூறப்பட்டதே. அற்றுயின் அவயவ அவையவிகள் நீக்கமின்றிருப்பன. ஆதலின் அவற்றது சம்பந்தம் யாததுவே சமவாயம். சமவாயமென்பது பொருந்தாது, அவயவத்தின் வேறு யவையவியின்மையின். பரமாணுக்களன்றோ? அங்ஙனம் பல; குடியிதுகுடமிது என்று சுவரப்படும். இதிற் கூறுதும். குடம் பரியதென்னுங் காட்சியுண்டு, அது பலவாய்ப் பரியதல்லதாய்ப் புலப்படாததாகிய பரமாணுக்களிலே உண்டாதல் தகாது.

இப்புத்தி மயக்கமென்னில் அன்று; வாதகமின்மையின்.

ஆதலினிங்ஙனந் திரவியாதியறுபொருளுங் கூறப்பட்டன. அவை விதிமுகஞானத்தால் அறியப்படுதலிற் பாவரூபங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபாவம்.

இப்பொழுது கிடேசமுகப் பிரமாணத்தால் அறிவதாகிய அபாவமான ஏழாம்பொருள் கூறுதும். அவ்வபாவம்; சமுசர்க்காபாவமெனவும், அந்யோந்யாபாவமெனவும் வகையான் இரண்டு.

சமுசர்க்காபாவம் பிராகபாவமும், பிரத்துவம்சாபாவமும், அத்தியந்தாபாவமுமென மூவகை.

உற்பத்திக்குமுன் காரணங்களிற் காரியமின்மை பிராகபாவம்? எங்ஙனம், நூல்களில் ஆடையில்லை. அஃதநாதி தோற்றமின்மையின். கெடுவதுங் காரியமே, அதன்கேடாதலின்.

தோன்றியகாரியத்திற் காரணங்களின்மை பிரத்துவம்சாபாவம். கெடுதலென்னுமளவு. எங்ஙனம்? குடமுடைகையிலோட்டிற் குடமில்லை. கோலானடித்தல் முதலியவற்றாற் பிறப்பது. அது தோன்றுவதாயினுங் கேடில்லது. கெட்டது மீண்டுத் தோன்றாமையின். முக்காலத்தினுமின்மை அத்தியந்தாபாவம். எங்ஙனம்? வாயுவிலுருவமில்லை. அந்யோந்யாபாவந் தாதான்மியத்தைப் பிரதியோகியாகவுடைய அபாவம்; குடம் ஆடையன்று. இங்ஙனம் அருத்தங்கள் கூறப்பட்டன.

. அற்றாயின் ஞாநத்தினும் பிரமத்தினும் வேறானபொருளில்லையெனின், அங்ஙனமன்று. அருத்தங்கள் காட்சியான் மறைக்கப்படாமையின்.

## புத்தி.

புத்தி, ஞாநம், உணர்வென்பன முதலிய பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாயச் சொற்களால் யாது கூறப்படும், அது புத்தி. பொருள் விளக்கம் புத்தி. அது அநுபவமும் நினைவுமென வகையான் இரண்டு.

அநுபவம் மெய்மையும் பொய்மையுமென இருவகை.

அவற்றுள் மெய்மை யாது? அவிசம்வாதமான அக்காட்சி முதலிய பிரமாணங்களாற் றோன்றுவது. எங்ஙனம்? குற்றமில்லாத கட்புல முதலியவற்றாற் குடமுதலிய ஞாநம்; புகையை இலிங்கமாகவுடையது தீஞாநம்; ஆவொப்புமைக்காண்டலாலாமாவென்னுஞ் சத்தவாச்சிய ஞாநம். "சோதிட்டோமத்தாற் றுறக்கம்வேண்டியான் வேட்க" வென்பது முதலியவாக்கியத்தாற் சோதிட்டோமத்திற்குத் துறக்கசாதநத்துவஞாநம்.

பொய்மை அருத்தத்தை நீங்கினது. அப்பிரமாணத்தாற் றோன்றுவது. அது சமுசயம், தருக்கம், விபரீதமென மூவகை. சமுசயதருக்கங் கண்பெறக் கூறுதும். விபரீதம் அஃதல்லதின்கண் கண்டவர்ச்சி; பிரமையென்னுமளவு. எங்ஙனம்? முன்னர்த்தோன்றும் வெள்ளியல்லாத இப்பியின், இது வெள்ளியென்று வெள்ளி வருவித்தல்.

நினைவும் மெய்மை பொய்மையென இருவகை. மெய்மை நனவில். கனவிலெல்லாஞாநமு நினைவும் பொய்மை, குற்றவசத்தால்; அதுவென்புழி யிதுவென்பதுதோன்றலின். எல்லா ஞாநமும் நிராகாரமே. ஞாநத்தில் அருத்தத்தாற் றனதாகாரந் தோன்றுமென்பதன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸாகாரஞானவாத நிராகரித்தலின். ஆதலினுனே அருத்தாகாரத்தாகாரத்தால் அருத்தாநுமானமுந் தள்ளப்பட்டது. குடமுதலியன காட்சியாதலின் எல்லா ஞானமும் அருத்தத்தாற் கூறப்படுவன. அது பொருளோடுகூடிலபமனத்தால் அறியப்படுதலின் நான்குட ஞானவானென்று இவ்வளவுந் தோன்றும்.

## மநம்.

அகவிந்திரியம் மநம். அதுவுங் கூறினும்.

## பிரவிருத்தி.

பிரவிருத்தி தருமாதருமங்கள். பிரவிருத்தி உலகவழக்கின் காரணமாதலின்.

## தோடம்.

தோடங் காமவெகுளி மயக்கங்கள். காமம் இச்சை. வெகுளி, கோபம், குரோதமென்னுமளவு. மயக்கம் பொய்மையறிவு; விபரீதமென்னுமளவு.

## பிரேத்தியபாவம்.

பிரேத்தியபாவம் மீண்டும் பிறத்தல், அது ஆன்மா புதிய உடம்போடுகூடுதல்.

## பலம்.

பலம் போகம், சுகதுக்க அநுபவம்.

## துக்கம்.

துக்கம் பீடை. அதுவுங் கூறினும்.

## அபவர்க்கம்.

வீடு அபவர்க்கம். அதுவும்இருபத்தொருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சையுடைமையேதுவிற்கட்டில். இரண்டாவது வைதருமிதிட்டாந்தம். எங்ஙனம்? அவ்வேதுவிற்கேமடு.

## ௬. சித்தாந்தம்.

பிராமாணிகத்தன்மையாலுடம்படுமருத்தரு சித்தார்த்தம். அது சர்வதந்திரம், பிரதிதந்திரம், அதிகரணம், உடம்பாடென நால்வகை.

அவற்றுள் சர்வதந்திர சித்தார்த்தமெங்ஙனம்? தருமிமாத்திரவுண்மை.

இரண்டாவதெங்ஙனம்? நையாயிகர்க்கு மனமிந்திரியம். அதுவுஞ் சமானதந்திரமானவைசேடிகத்தில் சித்தம்.

மூன்றாவதெங்ஙனம்? இலமுதலானவற்றின் கருத்தாச்சித்திகையில் அவனுக்குச் சர்வஞ்ஞத்துவம்.

நான்காவதெங்ஙனம்? சைமினியினுடைய நித்தியாநித்திய விசாரமெப்படியாயினுமாகச் சத்தங் குணமென்பது.

## ௭. அவயவம்.

அநுமானவாக்கியத்தினுடைய ஏகதேசங்கள் அவயவங்கள். அவை பிரதிஞ்ஞை முதலாயினவை. அங்ஙன நியாயசூத்திரமும்; பிரதிஞ்ஞையேதுவுதாரண உபநயநிகமங்களவையவங்கள். அவற்றுட் சாத்தியதரும விசிட்டதருமிப்பிரதிபாதகவசநம், பிரதிஞ்ஞை. எங்ஙனம்? மலைதீயுடைத்தென்பது.

பஞ்சமியந்தமான லிங்கப்பிரதிபாதகவசநம் ஏது. எங்ஙனம்? புகையுண்மையினாலென்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாத்தியோடு கூடின திட்டாந்தவசநம் உ
தாரணம். எங்ஙனம்? எதேது புகையுடைத்து
அது தீயுடைத்து; எங்ஙனம்? அட்டில். பக்கத்
தில் இலிங்கத்திலுறுசங்காரம் உபநயநம். எங்
ஙனம்? இதுவும் புகையுடையதென்பது. பக்க
த்திற் சாத்தியத்திலுறுசங்காரநிகமநம். எங்ஙன
ம்? ஆகையாற் தீயுடையதென்பது. இப்பிரதி
ஞ்ஞை முதலைந்தும் அவையவம்போல. அவை
யவங்கள் சமவாயிகாரணமல்ல. சத்தமாகாயத்
திற் சமவேதித்திருக்கையால்.

## ௮. தருக்கம்.

அநிட்டப்பிரசங்கம் தருக்கம். சித்தமானவி
யாத்தியையுடைய தருமங்களுள் வியாப்பியவ
ங்கிகாரத்தால் வியாபகத்தின் வரவு. எங்ஙனம்?
கண்டுகேடமுண்டாயின் அப்போது திலம்போல
க் காணப்படும் என்பது. இத்தருக்கம் பிரமாண
த்தை அறிப்பது. அங்ஙனமன்றே இம்மலை தீ
யுடையதோ இல்லதோவென்னுமையத்தின் பி
ன் ஒருவன் தீயில்லதென்று கருதிப் போந்தவ
னைக்குறித்துத் தீயில்லாதாயினதனுந் புகையில்
லதுமாகவேண்டுமென்று புகையில்லாமையின்
வரவுபண்ணப்படும், அதுவே தருக்கம். அநி
ட்டப்பிரசங்கமென்றுஞ் சொல்லப்படும். இது
அநுமானவிடைய சோதகம்; தீயில்லாமையைத்
தள்ளுதலால். ஆதலில் அநுமானத்தைஅறிப்பது.
தருக்கஞ் சமுசயத்திலடங்குமென்று ஒருவன்
சொல்வான். அது பொருந்தாது; ஒருசார்வை
யுடைய விடையத்தையுடையதாகையால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௯. நிண்ணயம்.

அவதாரணம் நிண்ணயம். அதுபிரமாணபலம்.

## ௰. வாதம்.

தத்துவமறியவேண்டுவான் கதை வாதம். அது எட்டுநிக்கிரகங்கட்கதிகரணம்; நூனம் அதிகம், அபசித்தாந்தம், ஏதுப்போலியின் பஞ்சகமும் அட்டநிக்கிரகங்கள்.

## ௰௧. சற்பம்.

உபயசாதநமுடையதாய் வெல்லவேண்டுமென்னுமிச்சையுடையான் கதை சற்பம். அது எல்லாநிக்கிரகத்திலுங் கிடைத்தற்கதிகரணம். பரபட்சம் தூஷிக்கப்படுகையிற் சுபட்சசாதநப் பிரயோகமுடிவாயுள்ளது சற்பம்.

## ௰௨. விதண்டை.

சுபட்சதாபனஹீனமாய்ப் பரபட்சதூஷணமாத்திரமுடிவாயுள்ள கதை விதண்டை. இவ்வைதண்டிகனுக்குப் பட்சமில்லை. சொல்வார் பலரையுடையதாய்ப் பூர்வோத்தரபட்சத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியக்கோவை கதை.

## ௰௩. ஏத்துவாபாசம்.

சொல்லப்பட்ட பக்கத்தருமத்துவமுதலான ரூபங்களுளொரு ரூபத்தாற் குறைந்தாலும் ஏதுவல்ல.

சிலரூபயோகத்தாலேதுவைப்போலத் தோன்றுவன ஏதுப்போலிகள், அவை அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியாபதிட்டமென்னும் பேதத்தாலைவகை. அவற்றுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாத்தமான வேதுவினுடைய பக்ஷதருமதையின் ஞானஞ் சித்தம் அதனுடைய அபாவம் அசித்தமென்று அசித்தலக்கணத்திற் சொல்லப்பட்டது. அதுவும் விருத்தமுதலானவற்றினுமொன்றென்று சாங்கரியந் தோன்றநின்றதாயினு மெப்படி சாங்கரியமின்றாமப்படிச் சொல்லப்படும். ஏதெச்சாதகத்தில் முன்னே தோன்றும் தோஷம் ஞானத்தில் சமாத்தமாயதுவே தோடத்தைப்பண்ணும். தாடனமென்னுமளவு, வேறல்ல. முன்னே தோன்றினதனுலே தோஷமறிவிக்கப்படுகையிற் கதை முடிவாயின. அன்னியத்துக்குப் போகமின்மையின்.

ஏதில் விரோதாதோட ஞானத்தைப்பண்ணுமது விருத்தவேதுப்போலி. ஏதில் வியபிசாராதிகளால் அப்படியாகும். அது அனைகாந்திகமுதலாயினவை. அவைகள் வியாத்தி பக்ஷ தருமத்துவத்தோடு கூடின ஏதுச்சொரூப ஞானமில்லாமையால்.

அசித்தங்கள் தோடஞானத்தைப்பண்ணுமென்பது. அசித்தம், ஆசிரையாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தமென மூன்றாவகை.

எவ்வேதுவுக்கு மாசிரையமறியப்படாதது ஆசிரையாசித்தம். எங்ஙனம்? ககநாரவிந்த மணமுடையது. அரவிந்தத்தன்மையால்; மடுவிற்றுமரைபோல. கடம் நித்தியம்; காரியத்துவத்தால். படம்போல என்பது மாசிரையாசித்தம்.

எவ்வேதுவாசிரயத்திலறியப்படாதது அது சொரூபாசித்தம். எங்ஙனம்? சாமாதியம் நித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவதுமாகும், உபசீவியம், உபசீவகம், அநுபயம் என மூன்றுவகையாம். அவற்றுள் முதலது வலிமையையுடையது. இரண்டாவது வலியில்லாதது. எங்ஙனம்? பரமாணுக்கள் அநித்தியம். மூர்த்தமாகையால்; கடம்போல. பிரமாணத்தாற் கவரப்படாத தருமியான பரமாணுக்களின் நித்தியத்துவாதமாகக் கூடாது. ஆசிரையாசித்தியால். இதனாற் பரமாணு சாதகத்துக்குப் பிரமாணியம் பணிக்கப்பட்டது. அன்றியிதற்குத் தோற்றமேயில்லாமையால். ஆதலால் உபசீவியம் வாதகமே. உபசீவியம் அற்பலமானதால். வாத்தியம் எங்ஙனம்? இத்தவநித்தியத்துவாதமாகமே. மூன்றாவது சற்பிரதிபட்சம்துல்லியபலத்தால்.

எதுக்குப் பிரத்தியட்சாதி பிரமாணத்தாற்பக்கத்திற் சாத்தியாபாவ பரிச்சின்னம். அது காலாத்தியாபதிட்டம். பாதிதவிடையமென்றுஞ் சொல்லப்படும். எங்ஙனம்? தீ வெம்மையில்லது. பதார்த்தத்துவத்தால்; சலம்போல. இங்கே பதார்த்தத்துவம் எது. அதுக்குச் சாத்தியம் வெம்மை யில்லது. அதனுடைய அபாவம் காட்சியானே பரிச்சின்னம். துவக்கேந்திரியத்தாற் றீயினது வெம்மையில்லாமை தள்ளப்படுகையால். இன்னுங் காலாத்தியாபதிட்டம் எங்ஙனம்? கணிகத்துவஞ் சாதிக்கின்றபோது சொன்ன சத்துவவேது. எங்கே கணிகத்துவஞ் சாத்தியம் அதனுடைய பாவம் பிறத்தபிஞாகம். பிரத்தியட்சத்தினாற் பரிச்சின்ன வென்றுல் முன்னறியப்பட்டது. அதவே இக்கடமொன்று பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவ அநுபவத்தாற் சஙித்தவாசனையோடு கூடி யவிந்திரியத்தாற் பிறந்து பூருவாபரகாலத்தையடைந்த புநத்தபிஞானத்தால் கடத்துக்கு நிலைமை துணியப்படும்.

இந்த அசித்தமுதலான பஞ்சவேதுப்போலியும் பக்கதருமத்துவ முதலான ரூபஹீநத்துவத்தாலேதுவல்லன. தம்சாத்தியத்தைச் சாதியாதனவிலக்கணமாகுங் கேவலவியதிரேகியினுடைய அதிவியாத்தி அவ்வியாத்தியசம்பவங்களுமிவற்றடங்கும். இவ்வைந்தினுள்வேறல்ல.

அதிவியாத்தியுடையது வியாப்பியத்துவாசித்தம். விபக்கத்தினீக்கமில்லாமையால். சோபாதிகத்துவத்தாலும். எங்ஙனம்? கோவிலக்கணம் என்றும் பசுத்துவத்துக்கு அலைதாடி முதலானவுண்மையிற் பிரயோசகம்.

அவ்வியாத்திக்குப் பாகாசித்தம். எங்ஙனம்? கோவிலக்கணமென்னுஞ் சித்திரவன்னமான அலைதாடி. அசம்பவம் சொரூபாசித்தம். கோவிலக்கணமான ஒரு குழம்புடைமை.

## ௰௪. சலம்.

தாற்பரியம் வேறுபடச் சொல்லுஞ் சொல்லுக்குப் பொருள் வேறு கற்பித்துத் தூடணஞ் சொல்லுதல், சலம். எங்ஙனம்? முதற் றாற்பரியத்தாற் சொல்லப்பட்ட நவகம்பளமுடையானிம்மைந்தனென்னும் வாக்கியத்திற்கு வேறுபொருளாய்ச் சங்கித்தொருவன், இவனுக்கு நவகம்பளங்களில்லை.—வறுமையால் இவனுக்கு இரண்டாயினுமில்லை —எங்ஙனமொன்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்று தாடியாகின்றான். இவ்வாதி சலவாதியாதலாற்றோற்றவன்.

## ௰௫. சாதி.

அசத்தான உத்தரஞ் சாதி. உற்கருஷ முதலான பேதத்தாற் பலவகைபெருகுமென்னும் பயத்தால் எல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவற்றுள் வியாத்தமான திட்டாந்ததருமத்தாற் சாதிக்கும்போது அவ்வியாபகத்தருமத்தை வருவித்தலுற்கருஷமென்னுஞ்சாதி. எங்ஙனம்? சத்தம் அநித்தியம், காரியத்துவத்தால் கடம்போலவென்று சொல்லுதற்கண் ஒருவனிங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவவேதுவாற் கடம்போலச் சத்தமநித்தியமாயின் அந்தவேதுவாலே அதுபோலவே சத்தஞ் சாவயவமாகவேண்டுஞ்சாத்தியவியாத்தமான திட்டாந்தமான தருமத்தாலென.

அவ்வியாபகமான தருமத்தின தபாவத்தை வருவித்தல் அபகருஷமென்னுஞ் சாதி. எங்ஙனம்? முன்சொன்ன அநுமாநத்தில் ஒருவன் இங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவவேதுவாற் கடம்போலச் சத்தம் அநித்தியமாயின், அந்தவேதுவிற் கடம்போலச் சத்தமுஞ் செவியாற் கவரப்படாததாகவேண்டும், கடஞ்செவியிற் கவர்வதன்றேயென.

## ௰௬. நிக்கிரகத்தாநம்.

தோல்வியேது நிக்கிரகத்தாநம். அதுநாநம், அதிசம், அபசித்தாந்தம், அர்த்தாந்தரம், அப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதிஞை, மதாநுஞ்ஞை, விரோதம் முதலானபே
தத்தாற் பலவிதமாயினும் பெருகுமென்று சொ
ல்லப்பட்டனவல்ல. சொல்லவேண்டியபொ
ருளிற் சிறிது குறைதல் நூநம். சொல்லவேண்
டிய பொருளினதிகம் அதிகம். சித்தாந்தத்தி
ன் கேடு அபசித்தாந்தம். பிரகிருதத்தில் சம்ப
ந்தமான பொருளுடைய சொல் அர்த்தாந்தரம்.
உத்தரத்தினது தோன்றாமை அப்பிரதிபை. தன
க்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்மதமா
னவர்த்தத்தைத்தானே அங்கீகரித்தல் மதாநுஞ்
ஞை. இட்டார்த்தபங்கம் விருத்தம். ஈண்டுமி
கவும் வேண்டாமையாகிய ரூபபேதங்களுக்கி
லக்கணங்கூறாமை குற்றமன்று.

தருக்கம் முற்றும்.

R 21856

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GAR 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DANIEL POOR LIBRARY
JAFFNA COLLEGE©
A13008
ARCHIVES
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org